# தளபதி வ.உ.சிதம்பரனார்

தொகுத்தவர் :
முல்லை முத்தையா

இன்ப நிலையம்
மயிலாப்பூர் சென்னை-4

மறு பதிப்பு : 5-9-1972 வ. உ. சி. நூற்றாண்டு விழா நாள்.
இந்நூலின் முழு உரிமையும் இன்ப நிலையத்தாருக்கு.

விலை ரூ. 1-50

16926

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை-5.

## உள்ளுறை


வ. உ. சி.-யின் வாழ்க்கைக் குறிப்பு
—முல்லை முத்தையா

2. உணர்ச்சி மிகுந்த சம்பவங்கள்
—முல்லை முத்தையா

3. வ. உ. சி.-க்கு வாழ்த்து
—மகாகவி பாரதியார்

வீர வணக்கம்
—சி. சுப்பிரமணியம்

நோக்கம் நிறைவேறிவிட்டது
—ராஜாஜி

6. வ. உ. சி. கனவு நனவாயிற்று
—'தினமணி'ச் செய்தி

சிந்தனை செய் நெஞ்சே
—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

8. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று
—மகாகவி பாரதியார்.

9. தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி
—மகாகவி பாரதியார்

10. பலதுறைப் புலவர் வ. உ. சி.
—வ. உ. சி. சுப்பிரமணியம்

சிறந்த நியாயவாதி
—பரலி-சு. நெல்லையப்பர்

திலகரிடம் விண்ணப்பம்
—தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

13. வ. உ. சி.-யின் கனவு
—தலைவர் ம. பொ. சிவஞானம்

14. பெரியார்
—டாக்டர் சோமசுந்தர பாரதியார்

வீரச் சிதம்பரனார்
—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

16. நான் கண்ட வ. உ. சி.
—பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை...

வீரர் சிதம்பரம் பிள்ளை
—நாமக்கல் கவிஞர்

18. வ. உ. சி.
—கி. ஆ. பெ. விசுவநாதம்

19. சிம்ம சொப்பனம்
—தமிழறிஞர் பி. ஸ்ரீ.

ஞாபகார்த்தம்
—டி. எஸ். சொக்கலிங்கம்

தமிழ் நாட்டின் தவப் புதல்வர்
—முல்லை முத்தையா

22. நன்றி
—முல்லை முத்தையா

# 1. வ. உ. சி.யின் வாழ்க்கைக் குறிப்பு

முல்லை முத்தையா

தமிழ் மக்கள் 'வ. உ. சி.' என்று அன்புடன் அழைக்கும் தேசபக்தர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள், திருநெல்வேலி ஜில்லா ஒட்டப்பிடாரம் என்னும் கிராமத்தில் 1872ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 6ஆம் நாள் தோன்றினார். தந்தையார் உலகநாத பிள்ளை; தாயார் பரமாயி அம்மாள்.

வ. உ. சி. இளவயதில் தூத்துக்குடி செயின்ட் ஸேவியர் உயர்தரக் கல்லூரியில் கல்வி கற்று, பிறகு சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று, 1900ஆம் ஆண்டில் ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்தார். அப்போது, அவரது தந்தையாரும் வழக்கறிஞராகவே இருந்தார்.

வள்ளியம்மை என்ற நங்கை நல்லாளை வ.உ.சி. மணம் புரிந்துகொண்டார். திருக்குறளின் வாழ்க்கைத்துணை நலத்துக்கு எடுத்துக் காட்டாக வள்ளியம்மையார் விளங்கினார். சிறிது காலத்தில் அவ்வம்மையார் அகால மரணம் எய்தினார். அவரது பிரிவு பிள்ளை அவர்களுக்குப் பெருங் கவலையை அளித்தது. பின்னர் வள்ளியம்மையாரின் குடும்பத்திலேயே திருமதி மீனாஷி அம்மையை மணம் புரிந்து கொண்டார். மூன்று புதல்வர்களும் இரண்டு புதல்விகளும் தோன்றினர்.

பிள்ளை அவர்கள் வாய்மையும், திறமையும் கொண்ட வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார். தேசபக்தி இவரது கவனத்தை ஈர்த்தது.

பிள்ளை அவர்கள் தீவிர தேசபக்தர் ஆனார். பாண்டியர், சோழர் காலத்தில் ஏழு கடலிலும் ஆதிக்கம் பெற்றிருந்த தமிழர்களின் கப்பல் தொழிலை வெள்ளையர் பறித்துக் கொண்டு விட்டார்களே என்ற எண்ணம் ஓயாமல் அவர் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. வங்காளப் பிரிவினையை எதிர்த்து நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பு சுதந்தரப் போரில் ஈடுபட அவருக்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக வாய்த்தது. ஆகவே, அந்தச் சுதந்தரப்போரில் தீவிரமாக ஈடுபட்டுத் தமிழ் நாட்டில் 'இரண்டாம் போர்முனை' ஒன்றை அவர் அமைத்து அதன் தளபதியாக இருந்து நடத்தினார். அவரது வீரமுழக்கம் மக்கள் உள்ளத்திலே சுதந்தரக் கனலை மூட்டியது. மக்கள் திரண்டு எழுந்து அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

அந்த சுதந்தரப் போரிலே சிதம்பரனாரின் முதல் தாக்குதல் பிரிட்டிஷ் வியாபார சமூகத்தினர் மீது தொடங்கியது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆணி வேர் பிரிட்டிஷ் வியாபாரிகளே என்பது பிள்ளை அவர்களின் கருத்து. அச்சமயம், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கப்பல் போக்குவரத்தை, "பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி" என்ற வெள்ளையர் கம்பெனி ஒன்று ஏகபோகமாக நடத்தி வந்தது. அந்த வர்த்தகத்தை எப்படியேனும் கைப்பற்றிவிட வேண்டும் என்று உறுதி கொண்டு சிதம்பரனார் "சுதேசிக் கப்பல் கம்பெனி" என்ற பெயர் கொண்ட இந்தியக் கப்பல் கம்பெனியை 1906ஆம் ஆண்டு தூத்துக்குடியில் தொடங்கினார். ஆரம்பத்தில் உள்ளூர் வியாபாரிகள் சிலருடைய பண உதவியும், பின்னர் இந்தியா முழுவதிலுமுள்ள வியாபாரிகளின் பேராதரவும் அந்தக் கம்பெனிக்குக் கிடைத்தது.

எஸ். எஸ். லாவோ, எஸ். எஸ். காலியோ என்ற இரண்டு கப்பல்களை வாங்கி, இந்தியா

வுக்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்கு வரத்தைத் தொடங்கினார். பிள்ளை அவர்கள் நாட்டின் நிலைமையை எடுத்து விளக்கியதன் பயனாகக் கப்பல் பிரயாணிகள், ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தது.

கம்பெனிக்கு, பாலவநத்தம் ஜமீந்தாரும், மதுரை தமிழ்ச்சங்கத் தலைவருமான ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தலைவர். பிள்ளை அவர்கள் காரியதரிசி. அகில இந்திய காங்கிரஸ் தலைவரும் பிரபல வழக்கறிஞருமான சேலம் ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியார் சட்ட ஆலோசகர்.

பிரிட்டிஷ் கம்பெனியார், இதனால் தங்கள் வர்த்தக நிலைமை மோசமாகிவிட்டதைக் கண்டு கலக்கமடைந்தனர். கட்டணங்களை படிப்படியாகக் குறைத்தும், பிரயாணிகளை இலவசமாக ஏற்றிச் செல்வதாகவும் அறிவித்தனர். வாடிக்கைக்காரர்களைத் தங்கள் பக்கம் திருப்பிக்கொள்ளப் பெரு முயற்சி செய்தனர். அத்துடன் நில்லாமல் பிள்ளை அவர்களைத் தங்கள் பக்கம் சாதகமாக்கிக் கொள்வதற்காக ஒரு பெருந்தொகையை அளிக்கக்கூட முயன்றனராம்.

சுதேசிக் கப்பல் கம்பெனியின் ஆரம்ப பொருளாதாரத் துறையில் சுதந்தரம் பெற இந்தியா செய்யும் முதல் முயற்சியென்றே இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் கருதலாயினர். ஆகவே, இதற்குக் காரணமாயிருந்த பிள்ளை அவர்களை எப்படியாகிலும் சிறைக்குள் அடைத்து, அவரது முயற்சியைச் சிதைத்துவிட எண்ணம் கொண்டனர். பிள்ளை அவர்கள் அரசியலில் தீவிரமாய் ஈடுபட்டது அதிகாரிகளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாகிவிட்டது.

பிள்ளை அவர்கள் காங்கிரஸில் லோகமான்ய திலகரைத் தலைவராகக் கொண்ட தீவிரக் கட்சியைச் சேர்ந்தவர். தமது குருவாகத் திலகரைப் போற்றி வந்தார். திலகரும், பிள்ளை அவர்களையே தமிழ் நாட்டில் தமது பிரதம சிஷ்யராகக் கருதி வந்தார்.

பொதுமக்களிடையே சுதந்தர உணர்ச்சியைப் பரப்புவதற்காக *1908*இல் திருநெல்வேலியில் "தேசாபிமான சங்கத்தை" பிள்ளை அவர்கள் தொடங்கினர்.

*1908*—மார்ச் மாதம் *9*-ந் தேதி, காங்கிரஸின் மாபெருந் தலைவர்களில் ஒருவரான வங்கத்தின் முடிசூடா மன்னர் விபினசந்திரபாலர் விடுதலை அடைந்ததை நாடெங்கும் மக்கள் கொண்டாடினர்.

திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டர் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார். அதை மீறிப் பிள்ளை அவர்களும், தேச பக்தர் சுப்பிரமணிய சிவாவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து பொதுக் கூட்டத்தில் வீரமுழக்கமும் செய்தனர்.

அதைக்கண்ட கலெக்டர் விஞ்ச் கலகலத்துப் போனர். உடனே பிள்ளை அவர்களையும் சிவாவையும் கூட்டிவரச் செய்து பயமுறுத்தினர். ஜில்லாவைவிட்டு வெளியேறி விடும்படியும், அரசியல் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்றும், நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். பிள்ளை அவர்கள் எதற்கும் அஞ்சாமல் பதில் அளித்து, கலெக்டரின் உத்தரவுகளுக்கு இணங்க மறுத்துவிட்டார். உடனே அப்பொழுதே பிள்ளை அவர்கள் கைது செய்யப்பட்டு 'ராஜத்துரோக'க் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் முதலான பலர், பிள்ளை தரப்பில் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். பிள்ளை அவர்களுக்கும் கலெக்டருக்கும் நடைபெற்ற சம்பாஷ

ணையை மகாகவி பாரதியார் கவிதையாக்கி யிருக்கிறுர்.

முடிவில் செஷன்ஸ் நீதிபதியால் ஜூலை மாதம் 7-ந் தேதி பிள்ளை அவர்களுக்கு ராஜத்துவேஷக் குற்றத்திற்காகவும், சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காகவும் இரட்டை ஆயுள் தண்டனை (இருபதும் இருபதும் மொத்தம் நாற்பது வருஷம்) ஒன்றன்பின் ஒன்ருக அனுபவிக்கத் தீர்ப்பு அளிக் கப்பட்டது. சிவாவுக்குப் பத்து வருஷ தண்டனை தரப்பட்டது. தீர்ப்பைக் கேட்ட மக்கள் கலங்கி னர். நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் இந்த அநீதியைக் கண்டித்து எழுதின. அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த மார்லி பிரபு இந்தத் தண்டனை நியாயமற்றது என்று குறிப்பிட்டார். பின்னர் சென்னை உயர் நீதிமன்ற அப்பீலில் பத்து வருஷங்களாகக் குறைத்தும், அதை ஏககாலத்தில் அனுபவிக்குமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் பின்னர், லண்டன் பிரீவிகவுன்ஸில் அப்பீலில் ஆறு வருஷங்கள் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

பிள்ளை அவர்களுக்கு அப்போது வயது முப்பத்தைந்து. நல்ல இளமைப் பருவத்தில், மனைவி, மக்களைப் பிரிந்து ஆறு வருஷங்கள் சிறைச்சாலையில் செக்கிழுத்து, கல் உடைத்து, கூழ்குடித்துத் துன்புற்ருர்.

அவரது லட்சிய உருவமான கப்பல் கம்பெனி அவர் சிறைப்பட்ட உடனேயே முறிந்து போய் விட்டது. கம்பெனியின் பங்குதாரர்கள் அவருக் குத் தொந்தரவு கொடுத்துக் கைவிட்டுவிட்டனர்.

தேசபக்தர், வழக்கறிஞர், கப்பலோட்டிய வீரர், தேசத்திற்காகச் சிறை சென்ற தளபதி, சிறையிலிருந்து வெளிவந்தவுடன் அவரை வறுமை வரவேற்றது. அதோடு சுப்பிரமணிய சிவாவும்

வரவேற்ருர். உடல் நலம் குன்றியது. வாழ்க்கையை நடத்துவதற்காக அவர் மீண்டும் வழக்கறிஞர் தொழிலே மேற்கொண்டார். அங்கிலேயில் கூட அவர் தேசசேவையிலிருந்து ஒதுங்கிவிடவில்லே. இயன்ற அளவு பணி செய்துகொண்டிருந்தார்.

'திருக்குறளி'ல் அவருக்கு ஈடுபாடு அதிகம். தொல்காப்பியம், திருக்குறள், ஜேம்ஸ் ஆலனின் மொழி பெயர்ப்பு நூல்கள் முதலியவற்றைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிருர்.

தமிழார்வம், நன்றி மறவாமை, அஞ்சா நெஞ்சம், எளியவர்களிடம் இரக்கம், தேசபக்தி, நேர்மை இவை பிள்ளே அவர்களின் குண இயல்புகள்.

பிள்ளே அவர்கள் தம் சுயசரிதையைக் கவிதையாக இயற்றியிருந்தார். அது "வ. உ. சி. சுய சரிதை" என்ற நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ஞானசிகாமணி முதலியார் என்ற தம்முடைய நண்பர் தமக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததின் ஞாபகார்த்தமாக தமது மூத்த புதல்விக்கு ஞான வல்லி எனப் பெயர் வைத்தார். தமது குடும்பத்திற்குப் பெரிதும் உதவி செய்த சித. ஆறுமுகம் பிள்ளே அவர்களின் பெயரைத் தம்முடைய இரண்டாவது புதல்வருக்கு இட்டிருக்கிருர். கோவை வழக்கறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் தமக்காக வழக்குகளில் விவாதித்ததற்காக மூன்ருவது புதல்வருக்கு சுப்பிரமணியன் என்ற பெயரைச் சூட்டிஞர். தில்லேயாடி வேதியப் பிள்ளே செய்த உதவி காரணமாகத் தம்முடைய புதல்விக்கு வேதவல்லி என்ற பெயரைச் சூட்டிஞர். தாம் சிறையினின்று மீண்ட பின்னர் வக்கீல் சன்னது மீண்டும் கிடைக்க உதவி புரிந்த வாலஸ் துரை ஞாபகார்த்தமாக தமது கடைசிப் புதல்வருக்கு

வாலேஸ்வரன் என்றும் பெயரிட்டுத் தம்முடைய நன்றி மறவாமையைப் புலப்படுத்தியுள்ளார்.

1936ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ந் தேதி, தமிழ் நாட்டின் தவப்புதல்வர், தளபதி சிதம்பரனுர் அமரரானுர்.

வீரர் வ.உ.சி அவர்களுடன் நெருங்கிப் பழகி, அந்தக் காலத்தில் அவருடன் தேச சேவையில் ஈடுபட்டவர்கள் பலர் இருந்தபோதிலும், அன்னுரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக யாரும் வெளியிடவில்லை. தமிழறிஞர் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் வ. உ சி. யைப் பற்றிய சிறு வரலாற்று நூல் ஒன்றை வெளியிட்டார்கள். அதன் பின்னர், சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம், வடநாட்டினரும் வணங்கத் தக்க முறையில் வ. உ. சி. புகழ் பரப்பிய பெருமை தலைவர் ம. பொ. சி. அவர்களுடையதே ! அத்துடன் அவர் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற வரலாற்று நூலை எழுதி அந்நூல் சுமார் பத்துப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

தாய்த்திரு நாட்டுத் தொண்டு புரிந்து அமரரான தளபதி சிதம்பரனுருக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக !

# 2. உணர்ச்சி மிகுந்த சம்பவங்கள்

முல்லை முத்தையா

## நானும் ஒருவன்!

1935-ஆம் ஆண்டு டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தார். அப்போது தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்து வருகையில் தூத்துக்குடிக்கு வருகை புரிந்தார். அப்பொழுது, சிதம்பரம் பிள்ளை அவர்கள் தம்முடைய இல்லத்திலே நோய்வாய்ப் பட்டிருந்தார். டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் அதைக் கேள்விப்பட்டதும் பிள்ளை அவர்களின் வீட்டிற்குச் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுச் சென்றார்.

அன்றைய தினம் மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள்,

"சிதம்பரம் பிள்ளை அவர்கள் வாழும் தூத்துக் குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறை சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்துத் தேசாபிமான ஆர்வங்கொண்டவர்களில் நானும் ஒருவன்" என்று கூறினார்.

*　　*

## குளிர்ந்த வேளையில் அவர் நினைவு

1 ல ஆண்டுகளுக்கு முன்னர், பினாங்கு துறை முகத்தில், 'தினமணி' துணை ஆசிரியர் திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரியாரும் சில நண்பர்களும் ஒரு நாட்டுப் படகில் சென்றனராம். படகோட்டி காயல் பட்டணத்தைச் சேர்ந்த வயோதிக முஸ்லீம்.

படகில் பிரயாணம் செய்பவர்கள் தமிழ் நாட்டவர்கள் என்பதை அறிந்ததும் அவர் தம்முடைய வாழ்க்கைச் சரிதத்தைக் கூறத் தொடங்கி,

"தண்ணிப் பழக்கம் எனக்கு நெடுநாளாக உண்டு. அந்த மகான் செதம்பரம் பிள்ளை மொதல்லே இளுத்து உட்டாரு. அவர் காலமாயிட்டாராமே?" என்று வருத்தத்துடன் கேட்டாராம். மேலும்,

முதன் முதலில் கப்பலோட்டிய தமிழரின் கீழ் பணியாற்றிய தமிழர்கள் சிலர் இப்போது மலேயாவில் வயிறு கழுவிக்கொண்டிருப்பதாகவும், குளிர்ந்த வேளையில் அவரைத் தினமும் நினைத்துக் கொள்வதாகவும் மனம் உருகக் கூறினாராம் அந்தப் படகோட்டி.

## சிதம்பரம் பிள்ளை ஊர்க்காரரா?

தூத்துக்குடி திருவாளர் ஏ. ஸி. பால்நாடார் அவர்கள் வழக்கறிஞர்; கம்பன் ரசிகர்; ரசிகமணி டி. கே. சி. யின் அன்பர். திருவாளர் நாடார் அவர்கள் 1936-ஆம் ஆண்டில் கொடைக்கானலுக்குச் சென்றிருந்தார். அவர் தங்கியிருந்த ஜாகையில் அறிமுகமில்லாத பல ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் சில இந்தியர்களும் தங்கியிருந்தனர். அவர்களிடம் திரு. நாடாரை அறிமுகம் செய்து வைத்து, 'இவர் தூத்துக்குடி வாசி' என்று குறிப்பிட்டார் நாடாருடைய நண்பர் ஒருவர். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இந்திய நண்பர் ஒருவர் மிக வேகமாக ஓடிவந்து, "நீங்கள் தூத்துக்குடியா? சிதம்பரம் பிள்ளையின் ஊர்க்காரரா?" என்று ஆவலுடன் கேட்டாராம். 'ஆம்" என்று பதில் அளித்தார் திரு. நாடார். உடனே அந்த

நண்பர் நாடாரைக் கட்டித் தழுவிக் கொண்டு, நாத்தழுக்க, கண்களில் நீர் மல்க,

"சிதம்பரம் பிள்ளை சௌக்கியமா? அவர் ஊர்க்காரரைக் காணும் பேறு பெற்றேனே!" என்று கூறி மெய்மறந்த அந்தக் காட்சி அங்கிருந்த எல்லோரையும் வியப்புறச் செய்ததாம்.

அந்த அரிய நண்பர்தான் ஆந்திர நாட்டைச் சேர்ந்த ஸ்ரீநிவாசமூர்த்தி. அவர் தம்முடைய பதினைன்காவது வயதிலே, சுதேசிக் கப்பல் கம்பெனி நடத்தும் வீரரைத் தரிசிப்பதற்காகப் பெற்றோரின் அனுமதியின்றி, ரயிலேறித் தூத்துக்குடி வந்து வீரச் சிதம்பரனாரைத் தரிசித்துக் கப்பலையும் கண்டு களித்துச் சென்றாராம். பின்னர் அவர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி, பிரபல வழக்கறிஞராகிப் புகழ் பெற்றார். தேசபக்தி மிகுதியால் சிறை சென்றார். அந்தத் தேச பக்தருக்கு சிதம்பரம் பிள்ளையின் ஊர்க்காரரைக் காண்பதுகூட தேசபக்தியாகத் தோன்றியது போலும்! தேசபக்தியின் சிறப்பை என்னவென்று புகழ்வது?

## பாரதியாரின் பாராட்டு

1906-ஆம் ஆண்டில் வீரச் சிதம்பரனார் அவர்களின் அரிய முயற்சியால் சுதேசிக்கம்பெனி நிறுவியதும், பாரிஸிலிருந்தும் பம்பாயிலிருந்தும் இரண்டு கப்பல்கள் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததும் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பங்களாகும். அந்த அரிய செயலை இந்தியப் பத்திரிகைகள் அனைத்தும் வாழ்த்தின; வரவேற்றன; சிதம்பரனாரின் தீரச் செயலைப் போற்றிப் புகழ்ந்தன.

அப்பொழுது தினப் பத்திரிகையான 'இந்தியா'வுக்கு மகாகவி பாரதியார் ஆசிரியராக இருந்தார். கப்பல் துறைமுகத்தை நெருங்குவது போலவும் மக்கள் அனைவரும் கூடி "வீரச் சிதம்பரம் வாழ்க!" என முழங்கி, கப்பலை வரவேற்பதுபோலவும் கார்ட்டூன் சித்தரித்து பிரசுரித்ததோடு,

"வெகுகாலமாகப் புத்திரப்பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏககாலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தம் அடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரத தேவியும் இரண்டு கப்பல்களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண்ணமே" என எழுதியிருந்தார்.

* *

## புகழ் பெற்ற தேச பக்தர்

தமிழ் நாட்டு அறிஞர்களையும் தியாகசீலர்களையும் வடநாட்டினர் அறிந்திருக்கும் அளவு தமிழ் நாட்டினர் அறிவதில்லை. அப்படியே அறிந்திருந்தபோதிலும் போற்றும் குணம் இருப்பதில்லை. இது நெடுங்காலமாகத் தமிழ் நாட்டின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள துரதிர்ஷ்டமாகும்.

அந்தக் காலத்தில் வீரச் சிதம்பரம் பிள்ளை அவர்களை, திலகர், விபினசந்திரபாலர், அரவிந்தர், லஜபதிராய், காந்தியடிகள், ராஜேந்திர பிரசாத் முதலானவர்கள் அறிந்து புகழ்ந்த அளவு தமிழ் நாட்டினர் அறிந்திருக்கவுமில்லை; போற்றவுமில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் குறிப்பிட வேண்டும்.

காங்கிரஸ் மகாசபை வருஷந்தோறும் ஒவ்வொரு ஊரில் கூடுவது வழக்கம். ஒரு வருஷம்

தூரத்தில் கூடியது. அங்கே பிரதிநிதிகளின் ஜாகையில் அரவிந்தர், லஜபதிராய் முதலான முற்போக்குத் தலைவர்களும் வேறு சிலரும் அமர்ந்திருந்தனர். அப்போது, அரவிந்தர் சுற்றும் முற்றும் பார்த்து அருகிலிருந்தவர்களிடம், "பிள்ளை அவர்கள் எங்கே?" என்று கேட்டாராம். அருகிலிருந்தவர்கள் அது யாரென்று அறியாமல் திகைத்தார்களாம். அரவிந்தர் மேலும் விளக்கமாக, "அவர்தான் புகழ் பெற்ற தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை" என்றாராம். இதைக் கேட்டதும் அருகிலிருந்தவர்கள் வியப்படைந்து விட்டார்களாம்.

அதே சமயம் பிள்ளை அவர்கள் அங்கே வந்து சேர்ந்ததும் அரவிந்தர் எழுந்து அவரை அன்போடு அணைத்துக்கொண்டதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததாம்.

*

## முதல் அரசியல் குரு

1939-ஆம் ஆண்டு செந்தமிழ்ச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் பெருமுயற்சியால் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் இராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில் தளபதி சிதம்பரனாரின் முக உருவச்சிலை ஒன்றை அமைத்தனர். அந்த விழாவுக்குத் தீரர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். டாக்டர் ராஜன் சிலையைத் திறந்து வைத்தார். தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர்களிலே டாக்டர் ராஜன் ஒரு வீரர். ராஜாஜியின் அரிய நண்பர். அந்த விழாவில் அவர் பேசியபோது,

"சிதம்பரம் பிள்ளை தூய தமிழர்; தமிழருக்குரிய ஆண்மையும் ஆற்றலும் ஒரு வடிவமெடுத்து கண்ணுக்குத் தோன்றுமானால், அது சிதம்பரம் பிள்ளையைப் போலத் தான் தோன்றும். நான் இங்

கிலாந்தில் இருந்தபோதும் அதற்குப் பின்னர் கொஞ்சநாள் வரையிலும் அரசியலில் புரட்சிக்காரனாகவே இருந்தேன். அதற்குக் காரணம், சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியேயாகும். எனவே, சிதம்பரம் பிள்ளை எனது முதல் அரசியல் குரு என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். பிள்ளை அவர்கள் நம் கண்ணிலிருந்து மறைந்தாலும் அவரது ஆவி நம்மைச் சுற்றி உலாவுகின்றது. நாம் நடத்தும் சுதந்தரப் போரில் சிதம்பரம் பிள்ளை ஆவி வடிவில் நின்று நமக்குத் துணை புரிகிறார் என்று நான் திடமாக நம்புகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

* * *

## தண்டனை அளித்தவர் புகழ்கிறார்

1908ஆம் ஆண்டு சிதம்பரனார்மீது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு அடிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்கு ஆரம்பமாகி, பின்னர் செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றலாகி சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்த அநீதி உலகறிந்த உண்மையாகும். அப்போது, திருநெல்வேலி ஜில்லா செஷன்ஸ் நீதிபதியாயிருந்த ஏ. எப். பின்ஹே அளித்த தீர்ப்பில்,

"சிதம்பரம் பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்று எழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிஷங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கும்'' என்று குறிப்பிட்டார்.

*

## அவர் செய்த தொண்டு

தேசிய உணர்ச்சி பொங்கிப் பிரவாகம் எடுத்த அந்தக் காலத்தில் எத்தனையோ பேர் சொத்து,

சுகம், தொழில் ஆகியவற்றை இழந்து துன்புற்றனர். நாட்டின் விடுதலை ஒன்றே லட்சியமாகக் கருதி இன்னல்களை எல்லாம் இன்பமெனக் கருதினர். படித்துக்கொண்டிருந்தவர்கள் பாதியில் நிறுத்திவிட்டனர். வழக்கறிஞர்கள் பலர் நீதிமன்றத்தில் விவாதிப்பதை விடுத்து தேசத் தொண்டில் ஈடுபடலாயினர். விலை உயர்ந்த உடைகளை அணிந்தவர்கள் கரடுமுரடான கதர் உடைகளை அணியத் தொடங்கினர். இவையெல்லாம் சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவங்கள். தியாக சீலர்கள் பலர் நாட்டின் விடுதலை கருதிப் பாடுபட்டபோது, மற்றும் சிலர் அதை வேறு விதமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். தேசிய இயக்கத்தையும் தேசத் தலைவர்களையும் இகழ்ந்து அந்நியர் ஆட்சியை ஆதரித்துப் பணமும் பட்டமும் பதவியும் பெற்றுச் சுகபோகத்தில் ஈடுபடலானுர்கள்.

தேசியப் போராட்ட காலத்தில் வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தென்னுட்டில் முன்னணியில் நின்று வீரமுழக்கம் செய்ததின் பலனுக, தூத்துக்குடி வட்டாரத்தில் தேசபக்திக் கனல் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அப்போது விநோத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

தூத்துக்குடியில் ரங்கசாமி அய்யங்கார் என்ற வழக்கறிஞர் ராஜபக்தி கொண்டவர். ஒரு நாள் காலையில் க்ஷவரத் தொழிலாளர் வந்து அய்யங்காருக்கு க்ஷவரம் செய்து கொண்டிருந்தார். அப்போது, அய்யங்கார் க்ஷவரத் தொழிலாளரிடம் தேசிய இயக்கத்தையும் சிதம்பரம் பிள்ளையையும் கேவலமாகப் பேசத் தொடங்கினுர். அவ்வளவுதான்! தேசபக்தி மிகுந்த க்ஷவரத் தொழிலாளருக்கு உணர்ச்சி மேலிட்டுவிட்டது. அய்யங்காருக்குப் பாடம் கற்பிக்க எண்ணி க்ஷவரத்தை அரைகுறையாக நிறுத்திவிட்டு எழுந்து போய்விட்டார். அய்யங்காருக்கோ அரைகுறை க்ஷவரத்தோடு

வெளியே தலைகாட்ட வெட்கம். சிறிது நேரத்தில் இந்தச் செய்தி நகரம் முழுதும் பரவத் தொடங்கியது. மீதிச் க்ஷவரத்தை அங்கேயே முடித்துக் கொள்ள அவரால் இயலவில்லை. என்ன செய்வார்? போலீஸ் உதவியோடு திருநெல்வேலிக்குப் போய் க்ஷவரத்தை முடித்துக்கொண்டு திரும்பினுர்.

தூத்துக்குடி மக்கள் தேசபக்தியில் அவ்வளவு சிறந்து விளங்கினுர்கள் என்ருல் பிள்ளை அவர்களின் தேசத் தொண்டு எவ்வளவு மதிப்புடையதாயிருந்திருக்க வேண்டும்? க்ஷவரத் தொழிலாளரும் தம்முடைய தேச பக்தியைக் காட்டிவிட்டார் அல்லவா?

## கோர்ட்டிலே தந்தையும் தனயனும்

வீரச் சிதம்பரம் பிள்ளை அவர்கள் வழக்கறிஞர். அவரது பாட்டனுர், தந்தையார், பெரிய தந்தையார் ஆகிய எல்லோருமே பரம்பரையாக வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். அதன் காரணமாக சிதம்பரனுரின் இல்லத்திற்கு "வக்கீல் ஐயா வீடு" என்ற பட்டப் பெயர் வழங்கி வந்ததாம்.

ஓட்டப்பிடாரம் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கு ஒன்றில் வாதி சார்பில் சிதம்பரனுரும் பிரதிவாதி சார்பில் அவரது தந்தையும் வழக்காடினுர்களாம். முடிவில் வெற்றி யாருக்கு? சிதம்பரனுர் பக்கமே வெற்றி கிட்டியதாம்.

தந்தையின் எதிரே தனயன் நின்று விவாதித்து வெற்றிபெற்றதை ஓட்டப்பிடார வட்டாரத்தில் மிகவும் வியந்து பேசிக் கொள்வார்களாம்.

## திறமைக்குப் பாராட்டு

சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெரும்பாலும் கிரிமினல் வழக்குகளில் எதிரி பக்கத்து வக்கீலாகத் தோன்றி விவாதிப்பது வழக்கமாம். குறுக்கு விசாரணை செய்வதிலும், சாட்சிகளை சமயோசிதமான கேள்விகள் கேட்பதிலும் நிபுணராம். அவருக்கு நிகர் அந்த வட்டாரத்திலே இல்லையாம். அவர் விவாதித்து வென்ற வழக்குகள் பல. அவற்றுள் குலசேகர நல்லூர் கொலை வழக்கு குறிப்பிடத் தக்கது. அதற்கென இரண்டு பெரிய வக்கீல்களை விசேஷ பப்ளிக் பிராசிக்யூட்டர்களாக நியமிக்கப் பட்டது. அவ் வழக்கில் சிதம்பரம்பிள்ளை அவர்கள் எதிரி பக்கம் தோன்றி, போலீஸ் சாட்சியங்களைக் குறுக்கு விசாரணையில் சின்னாபின்னப்படுத்தி விட்டார். முடிவில் எதிரியை விடுதலை செய்ய மாஜிஸ்டிரேட் தீர்ப்பு அளித்தார்.

அப்போது, வழக்கை முதலிலிருந்து கவனித்து வந்த உதவி போலீஸ் சூப்பரின்டெண்ட் பிளாக்ஸ்டோன் என்ற வெள்ளையர், சிதம்பரம் பிள்ளை அவர்களின் வாக்குச் சாதுர்யத்தையும் வாதத் திறமையையும் பாராட்டி அவருடைய கையைக் குலுக்கினாராம்.

சர்க்கார் தரப்பு அதிகாரி எழுந்து பாராட்டுவதென்றால் பிள்ளை அவர்களின் விவாதத் திறமையை என்னவென்று உரைப்பது?

## சாட்சிகள் மட்டுமா ?

பெரியார் பி. ஸ்ரீ. அவர்கள் தமிழ் இலக்கியத் திலே திளைத்தவர்; சிறப்பாக கம்பனில் அதிகம்

ஊறியவர். அவர் அந்தக் காலத்தில் கோவில்பட்டியில் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய போது சிதம்பரம் பிள்ளை அவர்கள் அந்தக் கூட்டங்களுக்கு வருகை புரிந்து சிறப்பிப்பாராம். சில கூட்டங்களுக்குத் தலைமை வகித்துச் சிறப்பிப்பதும் உண்டாம்.

'திருக்குறள் தர்ம சாஸ்திரம்,' 'கம்பராமாயணம் சகோதர தர்ம சாஸ்திரம்' என்று வ. உ. சி. கூறுவது உண்டாம்.

ஒரு சமயம் பி. ஸ்ரீ. அவர்கள் கம்பராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தினர்; ராவணனுடைய கிங்கரர்கள் அனுமனால் வதை செய்யப்பட்டதை வருணிக்கும் முறையைக் குறிப்பிட நேர்ந்தது. "அவர்கள் கூட்டம் கூட்டமாக அழிந்து போனார்கள்" என்பதற்குக் கவிஞன் உபமானம் காட்டுகிறான். ஒரு நீதிமன்றம்; அங்கே சாட்சிக் கூண்டில் ஒருவன் நிற்கிறான். அஞ்சாமல் நெஞ்சறியப் பொய் சொல்லுகிறான்; ஏதோ லாபம் கிடைத்துவிடும் என்று. ஆனால், கிடைப்பது என்ன? 'ஐயோ வம்ச நாசமாகப் போகிறானே!' என்று ஒரு காட்சியை அகக் கண்முன் காட்டி, அப்படிக் கூட்டம் கூட்டமாக அழிந்து போகிறார்கள். போர்க்களத்திலே கிங்கரர்கள் என்பதை உணர்த்துகிறான் கவிஞன்.

இப்படியாக, பாட்டை அவர் விளக்க முயன்றதும் சிதம்பரம் பிள்ளை அவர்கள் தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தாராம். பி. ஸ்ரீயும் மற்றும் சிலரும் வியப்புடன் பிள்ளை அவர்களைப் பார்த்த போது,

பிள்ளை அவர்கள், "சாட்சிகள் மட்டுமா? நாங்களும் அப்படித்தானே சில சமயங்களில் நெஞ்

சாரப் பொய் சொல்லவும் துணிகிறோம், நீதிக் கோயிலிலே!'' என்று சொன்னூராம்.

''என்ன தங்கமான இதயம்!'' என்று எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனராம்.

★

# 3. வ. உ. சி.-க்கு வாழ்த்து

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

"வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே !
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவோம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வாளாண்மை நின்துணைவர் பெறுகனவே
வாழ்த்துதிநீ வாழ்தி ! வாழ்தி"

★

# 4. வீர வணக்கம்

சி. சுப்பிரமணியம்

வீர வணக்கம் என்பது நம்முடைய நாட்டில் தொன்றுதொட்டு வரும் பழக்கம். மக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்துவந்த தீயவர்களை அழித்து நல்லதை நிலைநாட்டியவர்களுக்கு நாம் இன்றும் விழா கொண்டாடி வருகின்றோம். இந்தப் பழக்கம் நம்முடைய நாட்டிற்கு மட்டுமல்லாமல் உலகம் அனைத்திற்கும் பொதுவாக இருக்கிறது. வீரர்களை வணங்காத நாடு வீரர்கள் நிறைந்த நாடாக இருக்காது. நாளடைவில் அந்த நாடு மற்றவர்களுக்கு அடிமைப்பட்டுவிடும். நம்முடைய நாட்டின் விடுதலைக்கு நம் முன்னோர்கள் பலர் வீரத்தோடு அன்னியர்களை எதிர்த்துப் போரிட்டனர். அவர்களுள் மிகவும் முக்கியமான வீரர் நம்முடைய வ. உ. சி. அவர்கள்.

அன்னியனைப் போராட்டத்தின் மூலமாக மட்டுமின்றி ஆக்கவேலைத் திட்டங்களின் வாயிலாகவும் முறியடிக்கலாம் என்பதைக் காந்தியடிகள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். அக்கொள்கைக்கு ஏற்ப நமது வ. உ. சி.யும் சுதேசிக் கப்பல் மூலம் வாணிகம் நடத்தி எதிரிகளின் வளத்தைக் குறைத்து நம்முடைய நாட்டின் வளத்தைப் பெருக்க முயன்றார். அந்தப் போராட்டத்தின் போது அவர் அடைந்த இன்னல்கள் அளவற்றன. ஆனால், அவைகளைக் கண்டு அவர் சிறிதும் கலங்காமல்,

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்;—இனி அஞ்சிடோம்"

என்று முழங்கினார்.

வ.உ.சி. போன்ற பெரும் தலைவர்கள் நடத்திய போராட்டத்தின் மூலமாகத்தான் நாம் இன்றைய தினம் சுதந்தரம் பெற்றுள்ளோம். பெற்ற சுதந்தரத்தைப் பேணிக் காப்பது சுதந்தரம் வாங்குவதைவிட மிகவும் கடினமான காரியம் ஆகும். அப்பெரும் பணியைச் சாதிப்பதற்கு நமக்குவேண்டிய ஊக்கத்தையும் ஆற்றலையும் கொடுப்பது வீர வணக்கம். எனவே, வ. உ. சி. அவர்களின் தன்னலத் தியாகத்தையும் நாட்டின் விடுதலைக்காக அன்னியர்களின் கையிலே அவர் பட்ட துன்பத்தையும் நாம் மறவாது இருப்போமாக; நமக்காக அவர் செய்த தன்னலமற்ற தொண்டிற்காக அவருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

★

# 5. நோக்கம் நிறைவேறி விட்டது

ராஜாஜி

நண்பர்களே !

சுமார் நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன் னுல்தான் நவீன காலத்து ஐரோப்பியர்கள் கடற் பிரயாணம் செய்து இந்தியாவுக்கும் வந்தார்கள். அதற்கு முன் பல்லாயிர வருஷங்களாக இந்திய வர்த்தகர்கள் கப்பல் ஏறிக் கடல் கடந்து சென்று வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்துவந்தார்கள். இந்துமகா சமுத்திரத்தையும் அரபிக் கடலையும் கடந்து மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும் கிழக்கே சீனம் வரையிலும் சென்று இந்திய வியாபாரிகள் தொழில் நடத்தி வந்தார்கள். இந்துமகா சமுத்தி ரத்திலுள்ள தீவுகளிலும் பசிபிக் மகா சமுத்திரத் தின் மேற்குப் பகுதியிலுள்ள தீவுகளிலும் ஹிந்து சமய முறைப்படி கட்டிய கோயில்கள் இன்றைக் கும் இருக்கின்றன. இந்தியப் பண்பாட்டின் வேறு சின்னங்களும் அங்கே எல்லாம் காணலாம். கட லுக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள அந்தப் பிர தேசங்களுடன் புராதன இந்தியாவில் ஜனங்கள் நீடித்த போக்கு வரத்து வைத்துக்கொண்டிருந் தார்கள் என்பதற்கு மேற்படி கோயில்களும் மற்ற கலைச் சின்னங்களும் அத்தாட்சியாகும்.

ஏசுநாதர் சகாப்தம் ஆயிரத்தைந்நூறு வரு ஷங்களுக்குப் பிறகுதான், ஐரோப்பாவில் கொலம் பஸ் என்பவர் பெருங்கடல் கடந்துசெல்லும் முயற் சியில் முனைந்தார். அதுவரையிலும் மேனாட்டு மாலுமிகள் எல்லோரும் கரையோரமாகவே கப்பல் களைச் செலுத்தி வந்தார்கள். நடுக்கடலுக்குப் போவதற்கு அவர்கள் அப்போது துணியவில்லை.

ஆனால், கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னால் அதாவது இரண்டாயிர வருஷத்துக்கு முந்தியே ஹிந்துக்கள் கப்பல்களில் ஏறி மகாசமுத்திரங்களைத் தாண்டிச் சென்றார்கள். இந்த விவரங்களை யெல்லாம் சில நாளைக்கு முன்னால் நமது கடற்படைத் தலைவர் டபிள்யூ. ஈ. பாரி ஒரு சமயத்தில் நன்கு எடுத்துச் சொன்னார்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் இந்தியர்கள் அரபிக் கடலைக் கடந்து எகிப்து தேசத்துக்கும் ரோம சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்துவந்தார்கள். இந்த உண்மையை நிரூபிப்பதற்கு இந்தியாவின் இலக்கியத்திலும் இந்தியச் சிற்பங்களிலும் அத்தாட்சிகளைக் காணலாம். கிரீஸ், ரோம் தேசங்களின் புராதன சரித்திராசிரியர்களும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

சரித்திரம் என்று சொல்வதற்கு எப்போது ஆதாரம் கிடைத்திருக்கிறதோ அந்த நாளில் இருந்து ஹிந்துக்கள் வங்காளக் குடாக் கடலையும் இந்துமகா சமுத்திரத்தையும் கப்பலில் கடந்து சென்று பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளில் குடியேறிவந்தார்கள். கிறிஸ்தவ சகாப்தம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ஹிந்துக்கள் மலாய் நாட்டுக்கும் சீனா தேசத்துக்கும், இப்போது இந்தோனேஷியா என்று வழங்கப்படும் ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கும் கப்பல் ஏறிச் சென்றது உண்டு. பாடலீபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்ட சந்திரகுப்தன் முதலிய மௌரிய வம்சத்து மன்னர்களுக்கு "கீழ்க் கடல்களின் அதிபதி" என்னும் பட்டம் ஒன்று வழங்கியது.

ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் என்னும் சீன யாத்திரீகர், தாம் இந்தியக் கப்பலில் கடற் பிரயாணம் செய்ததைப் பற்றி

எழுதி யிருக்கிறார். ஒரிஸாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து நிக்கோபர் தீவுகளுக்கும் அங்கிருந்து மலாக்கா வழியாகச் சீனாவுக்கும் இந்தியக் கப்பலில் அவர் பிரயாணம் செய்தார். இது ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. அக்காலத்தில்தான் மலாயிலும், சுமத்ராவிலும், ஜாவாவிலும் இந்தியர்களின் ஆட்சி நிலை நாட்டப்பெற்றது. பிறகு, ஆயிர வருஷகாலம் இந்து மகாசமுத்திரம் ஹிந்துக்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. அதற்குப் பிறகு அராபியர்கள் கடல் ஆதிக்கம் பெற்றார்கள்.

ஹிந்துக்கள் கடல் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் எந்த நாட்டுக் கப்பலும் தடையின்றிப் போக அனுமதித்திருந்தார்கள். கடற்கொள்ளைக்காரர்களை அடக்கிக் கடல் மார்க்கங்களைப் பயமின்றிச் செய்திருந்தார்கள். நமது முன்னோர்கள் தர்ம மார்க்கத்தில் பற்றுள்ளவர்கள். ஆகையால் கடல் மார்க்கத்தில் தனி ஆதிக்கம் கோரவில்லை. எல்லா தேசக் கப்பல்களும் கடற் பாதைகளில் சுதந்தரமாகவும் நிர்ப்பயமாகவும் போகக்கூடியதாயிருந்தது. ஆனால், 1500-ஆம் வருஷத்தில் போர்ச்சுகல் நாட்டார் கடல் ஆதிக்கம் பெற்றபோது கடல் மார்க்கங்களுக்குத் தனி உரிமை ஸ்தாபிக்க முயன்றார்கள். வேற்று நாட்டுக் கப்பல்களைத் தடை செய்தார்கள். இவ்விதம் போர்ச்சுகீசியர்கள் கடல் மார்க்கங்களில் ஏகபோக உரிமை கொண்டாடியதைக் கள்ளிக்கோட்டைத் தம்புரான்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடினார்கள்.

அப்போது நடந்த மூன்று கடல் யுத்தங்களில் தம்புரான் தோல்வியடைந்தபடியால், கடல் ஆதிக்கம் போர்ச்சுகீசியர்களின் கைக்கு மாறியது. இந்தச் சம்பவம் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. பிளாஸிச் சண்டையும் கிளைவ் முதலியவர்கள் வெற்றி பெற்ற மற்றும் பல தரை

யுத்தங்களையும்விட 1503-லும் 1509-ஆம் வருஷத்திலும் நடந்த கடல் யுத்தங்களே அடுத்த நானூறு வருஷங்களுக்கு இந்தியாவின் விதியை நிர்ணயித்தனவென்று கடற்படை நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சிவாஜி மன்னரின் காலத்தில் அவருடைய கடற்படைகளுக்கும் மொகலாயர்களின் கடற்படைகளுக்கும் யுத்தம் நடந்தது. இதையெல்லாம் கவனித்தால் இந்திய மக்களுக்குக் கடற்பிரயாணம் புதிய விஷயமல்ல என்பதை அறியலாம். இந்தக் காலத்திலேகூட நமது செம்படவர்களின் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள்! எவ்வளவு சகஜமாக அவர்கள் கடலில் பாய்கிறார்கள். நம் நாட்டு இளைஞர்கள் இந்த விஷயத்தில் மேனாட்டு இளைஞர்களுக்குப் பின்வாங்க மாட்டார்கள் என்பது நிச்சயம். சமுத்திர ராஜனிடத்தில் மற்ற தேசத்தாருக்குள்ள உறவும் பாத்தியதையும் நமக்கும் நிச்சயமாக உண்டு. விஞ்ஞானக் கருவிகளை உபயோகித்துக் கப்பல் ஓட்டுவதிலும் நமது இளைஞர்கள் மிக்க திறமையுடன் விளங்குகிறார்கள் என்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, நமது அன்பிற்குரிய சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியார் இவர்களின் கனவும் நம்முடைய காலத்தில் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ. சிதம்பரம்பிள்ளை அவர்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. இன்று நாம் தொடங்கும் காரியத்துக்கு அந்த ஆத்மாவின் ஆசியைப் பெறுவோமாக. கப்பல் அவருடைய திருப்பெயர் பூண்டு விளங்குகிறது. ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை ஆனந்தக் கண்ணீர் ததும்பும் தம் பெரிய கண்களை அகல விரித்து இந்த விழாவையும் என்னையும் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இந்தக்

காட்சி அவருக்குக் கொஞ்சம் தாமாஷாகவும் இருக்கும். ஹார்வி கம்பெனி, பி.ஐ.எஸ்.என். கம்பெனி இவற்றின் ஒத்துழைப்புடனும் இந்தியாவிலுள்ள சகல அரசாங்க ஸ்தாபனங்களின் ஆதரவுடனும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இந்தக் கப்பல் போக்குவரவை இன்று நான் ஆரம்பித்து வைக்கிறேன். ஹார்வி கம்பெனியைச் சேர்ந்தவர்களும், பி. ஐ. எஸ். என். கம்பெனியை நடத்தியவர்களும் அந்த நாளில் ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளையை ஒரு பயங்கரமான எதிரியாகக் கருதினர்கள். ராஜத்துவேஷக் குற்றம் சாட்டினுர்கள். பின்ஹே துரையைக் கொண்டு விசாரணை நடத்தி, ஆயுள் பரியந்தம் இரட்டிப்பு தீவாந்திர தண்டனை விதிக்கச் செய்தார்கள். அந்தத் தீர்ப்பைக் கண்டு இந்தியா முழுதும் கதி கலங்கியது. தேசமெங்கும் ஆத்திரம் பொங்கியது. ஹைகோர்ட்டார் ஆயுள் தண்டனையை ஆறு வருஷ சிறைத் தண்டனையாகக் குறைத்தார்கள். பெரும் அநீதிக்குச் சிறிது பரிகாரம் ஏற்பட்டது. இந்தத் தூத்துக்குடி மகா ஜனங்களை 'வந்தே மாதரம்' என்று கோஷமிடும்படி செய்தது ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை செய்த பெரிய குற்றம். ஸ்ரீ. சுப்பிரமணிய சிவம் பேசிய கூட்டங்களில் பிரசன்னமாகியிருந்து, 'இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டும்' என்று சிவம் கூறியதைப் பூரணமாக ஒப்புக்கொண்டது இன்னொரு பெரிய குற்றம். இந்தக் குற்றங்களுக்காகத்தான் ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை தண்டனை அடைந்தார். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளையும் ஸ்ரீ. சுப்பிரமணிய சிவமும் ஆறுவருஷம் சிறையில் கஷ்டப்பட்டுவிட்டு வெளியே வந்தார்கள். அவர்களைத் தண்டித்த பின்ஹேயை ஹைகோர்ட் நீதிபதியாக உயர்த்த வேண்டுமென்ற ஒரு யோசனை ஏற்பட்டது. அதை அங்கீகரிக்க அப்போது இந்தியா மந்திரியாயிருந்து வந்த லார்டு மார்லி மறுத்து விட்டார். மார்லி தம்முடைய

''ஞாபகங்கள்'' என்ற புத்தகத்தில் இது விஷயமாக எழுதியிருப்பது நமக்கு இப்போது ரசமாக இருக்கும்.

நாற்பது வருஷங்களில் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றி விட்டது. ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை எதற்காகச் சிறை சென்று கஷ்டப்பட்டாரோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. நாம் பூர்ண சுதந்தரம் பெற்று விட்டோம். ஹார்வி கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் விருந்தாளியாக இன்று நான் தங்கியிருக்கிறேன். பி. ஐ. எஸ். என். கம்பெனியார் தங்களுடைய கப்பலை நிறுத்திக்கொண்டு ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளையின் பெயர் பூண்ட இந்தக் கப்பல் செல்வதற்கு இடமளித்திருக்கின்றனர்.

தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் ஏற்பட்டுவிட்டது. மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்தக் கப்பல் போக்கு வரவை ஆரம்பித்து வைக்கிறேன். வீரபுருஷரான ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் திருப் பெயரை இந்தக்கப்பலுக்குச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் பாரதக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு கடலில் செல்லும். இந்தியக் கப்பல் தொழிலைப் புனர்நிர்மாணம் செய்யத் திறமையும் சிறந்த நிர்வாக அனுபவமுமுள்ள ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் ஏற்கெனவே எவ்வளவோ செய்திருக்கிருர்கள். இன்னும் செய்து வருகிருர்கள்.

இந்தியா ஒரே நாடு. இந்தியாவின் பெருமையைப் பிரித்துப் பங்கிட முடியாது. எனினும், இந்தியக் கப்பல் போக்குவரவை மீண்டும் ஆரம்பிக்கும் கைங்கரியம் இந்தத் தூத்துக்குடியில் ஆரம்பிக்கிறது. இந்த ஆரம்ப வைபவத்துக்குச் சிவா அவர்களின் பலி தானமே ஆரம்ப வேள்வியாக

அமைந்தது. இதை எண்ணித் தென்னிந்தியர்கள் பெருமிதம் கொள்ளலாம்.

சென்று போன காலத்திய மாத்சரியமும், அறியாமையும், துவேஷமும் ஒழிந்து போகட்டும். சுதந்தர இந்தியா மகோன்னதாக விளங்கட்டும். இந்தக் கப்பலின் நாயகனுக்கும், மாலுமிகளுக்கும் இதை நடத்தும் நிர்வாகிக்கும் மனப்பூர்வமாக வாழ்த்துக் கூறுகிறேன். திறமையுடன் இடைவிடாது தொழில் முறையில் உழைப்பதே தேச பக்தி. தங்கள் செயலால் இவர்கள் நிரூபித்துக் காட்டுவார்களாக!

★

* 9-2-1949இல் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த ராஜாஜி, தூத்துக்குடி துறைமுகத்தில் 'வ. உ. சி. கப்பலை' மிதக்க விட்டு, அதற்கு வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் திருப்பெயரை இட்ட விழாவின் போது நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

# 6. வ. உ. சி. கனவு நனவாயிற்று

தூத்துக்குடி, பிப்.9—பழம்பெரும் தேச பக்தரும் கப்பலோட்டிய தமிழருமான காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை 43 வருஷங்களுக்கு முன்பு கண்ட கனவு இன்று நனவாகிவிட்டது.

இந்தியாவின் தென்கிழக்குக்கரையோரமாக, சென்னையிலிருந்து சுமார் 500 மைல் தூரத்தில் உள்ள தூத்துக்குடி என்னும் ஒரு சிறிய துறை முகப் பட்டணத்தில் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி இன்று "வ. உ. சி. கப்பலை" மிதக்கவிட்டு அதற்குச் செக்கிழுத்த செம்மலின் நாமகரணம் சூட்டி, தூத்துக்குடி-கொழும்பு கப்பல் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார்.

### கனவு நனவாயிற்று

சின்னஞ்சிறு தூத்துக்குடி இன்று 'வ. உ. சி. கப்பல்' மிதக்க விடப்பட்ட வைபவம் காரணமாக மிகுந்த புகழ் பெற்றுவிட்டது. எங்கும் திருவிழாக் காட்சிகளே காணப்படுகின்றன.

"வ. உ. சிதம்பரம்" கப்பல் தூத்துக்குடியிலுள்ள ஏர், ஸ்டீமர் ஜெனரல் ஏஜன்ஸீஸுக்குச் சொந்தமானது. அந்தக் கம்பெனியார் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கின்றனர். தூத்துக்குடியிலிருந்து 150 மைல் தூரம் உள்ள கொழும்புக்கு 10 மணி நேரம் கடற் பிரயாணம் செய்யவேண்டும்.

இந்தியக் கடலில் இந்தியக் கப்பல்களே ஓட வேண்டும். இந்திய வர்த்தகத்தை இந்தியக் கப்பல்களே நடத்த வேண்டும். ஏழு கடல்களிலும் இந்தியக் கப்பல்கள் சஞ்சாரம் செய்யவேண்டும் என்று உறுதி கொண்ட தமிழ் நாட்டின் 'வீரகேசரி

யாக' விளங்கிய வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் பெயர் இந்தக் கப்பலுக்கு இடப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைத் தமிழ் நாட்டில் "வ. உ. சி." என்று அன்புடன் மக்கள் குறிப்பிடுகிறுர்கள்.

## சுதேசிக் கப்பல் கம்பெனி

வெள்ளையரால் நடத்தப்பட்ட பிரிட்டிஷ் இந்திய கப்பல் கம்பெனியே தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஏகபோகமாகக் கப்பல் போக்குவரத்து நடத்தி வந்தது. வெள்ளையர் கம்பெனியிடமிருந்து கப்பல் வர்த்தகத்தைக் கைப்பற்றும் பொருட்டு வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒரு சுதேசி கப்பல் கம்பெனியை 1909-ஆம் வருஷத்தில் ஆரம்பித்தார். அரசியல் குற்றங்களுக்காக அவர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். பிறகு அவர் ஆரம்பித்த கம்பெனி மறைந்துவிட்டது. அவருடைய ஞாபகார்த்தமாகவே இந்தக் கப்பல் மிதக்க விடப்படுகிறது. ஒரு இந்திய கம்பெனியே தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே கப்பல் போக்குவரத்தை நடத்த வேண்டும் என்று 43 வருஷங்களுக்கு முன்பு வ. உ. சிதம்பரனர் கண்ட கனவு இன்று நனவாகிவிட்டது. இன்று தமிழ் நாட்டின் மக்கள் பெருமிதமடைய வேண்டிய நன்னளாகும்.

## கப்பலின் வரலாறு

சிதம்பரனரின் நாமகரணம் சூட்டப்பட்டிருக்கும் கப்பலின் பழைய பெயர் "எக்ஸாண்ட்ரியா." புதிய கப்பல் கம்பெனியின் ஏஜண்டுகள் லண்டனில் உள்ள இந்திய வர்த்தக கமிஷனர் மூலமாக நடப்பு வருஷ ஆரம்பத்தில் கிரீஸ் கப்பல் கம்பெனியாரிடமிருந்து 50,000 பவுனுக்கு விலைக்கு வாங்

கினர். பம்பாய் துறைமுகத்தில் அது புதுப்பிக்கப் பட்டது. அது 1069 டன் எடையுள்ளது. அதில் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்ல வசதி இருக்கிறது. மற்றும் கால் நடைகளை வைக்கவும் விசேஷ வசதிகள் உள்ளன. 200 பிரயாணிகளை ஏற்றலாம்.

யுத்தத்திற்கு முன்பு தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே மாதம் ஒன்று சுமார் 3000 டன் சரக்குகள் ஏற்றுமதியாகி வந்தன. ஆனால், கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்றுமதி 2000 டன்னாகக் குறைந்துவிட்டது. தூத்துக்குடியிலிருந்து பெரும்பாலும் கொழும்புக்கு வெங்காயம், மிளகாய் வற்றல், மீன் முதலியனவே ஏற்றுமதியாவது வழக்கம்.

## வாரம் இருமுறை பிரயாணம்

இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் கப்பல் போக்குவரத்து தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே வாரத்திற்கு இருமுறை நடைபெறும். தூத்துக்குடியிலிருந்து செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் புறப்படும். கொழும்பிலிருந்து திங்கள், வியாழக்கிழமைகளில் புறப்படும்.

—'தினமணி' 9-2-1949.

★

# 7. சிந்தனை செய் நெஞ்சே

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல் மெலிந்தோன்
—ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதரம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.—

வஞ்சிலா வானமதியின் ஒளிபோல —
விஞ்சிநீ டூழி விளங்குவே—வஞ்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

★

# 8. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்;—கனல் – மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்;—வலி—காட்டுவேன்
(நாட்டி)

கூட்டங்கூடி வந்தே மாதர மென்று
கோஷித்தாய்;—எமைத்—தூஷித்தாய்;
ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்;—பொருள்—ஈட்டினாய்
(நாட்டி)

கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்;—சட்டம்—மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினாய்;—வீரம் பேசினாய்;
(நாட்டி)

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்;—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்;—ஆசை—ஊட்டினாய்
(நாட்டி)

5. தொண்டொன் றேதொழிலா கக்கொண்
டிருந்தோரைத்
தூண்டினாய்;—புகழ்—வேண்டினாய்;
கண்டகண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்;—சோர்வை—ஓட்டினாய்
(நாட்டி)

6. எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்;—விதை—தூவினாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ?—நீங்கள்—உய்யவோ?
(நாட்டி)

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்;—குத்திக்—கொல்லுவேன்;
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்;—பழி—கொள்ளுவேன்
(நாட்டி)

★

# 9. தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ—தெய்வம்—பார்க்குமோ?
வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்;—முடி—தாழ்த்துவோம்;
எந்தம் ஆருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ?—அவ—மானமோ?
பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளை
கொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுதுகொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ?—உயிர்—வெல்லமோ?
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ இது
நீதமோ—பிடி—வாதமோ?
பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாபமோ?—மனஸ்—தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது

ஒற்று மைவழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்;—நன்கு தேர்ந்திட்டோம்;
மற்றும் நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம்;—சித்தம்—கலைவுறோம்
சதையைத் துண்டு துண்டாக்கினால்
உன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹா பக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ?

★

# 10. பலதுறைப் புலவர் வ. உ. சி.

கப்பலோட்டிய தமிழரின் புதல்வர்
வ. உ. சி. சுப்பிரமணியம்

"வ. உ. சி." என்ற மூன்றெழுத்துக்கள் தெரியாத தமிழ்மகன் இல்லை எனலாம். 'வ. உ. சி.' என்றால் 'கப்பலோட்டிய தமிழன்' என்று பள்ளிப் பிள்ளைகளும் கூறி விடுவர்! நன்றி பாராட்டும் நற்பண்புடைய தமிழ் மக்கள் அன்புடன் 'வ. உ. சி.' என்று முன்றெழுத்தில் குறிக்கும் என் தந்தை வ. உ. சிதம்பரம் பிள்ளை இன்று வாழ்ந்தால் அவர்களுக்கு 87 வயதாகியிருக்கும். ஆனால், அவர்கள் நம்மைவிட்டு மறைந்து 23 ஆண்டுகள் ஓடி விட்டன!

"செக்கிழுத்த செம்மல்," "கல்லுடைத்த நல்லவர்," "வெஞ்சிறை வாழ்ந்த நூலோர்" என்றெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகம் வ. உ. சி. க்குப் புகழ் பாடுகிறது.

என் தந்தையார் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதை அறிந்தவர்கள் சிலரே. அவர் அந்தக் கால அதிகாரிகளுக்கு ஒரு 'சிம்ம சொப்பனமாக' இருந்தார் என்று கூறினால் போதும்; அதுவே அவரது வழக்குரைக்கும் வன்மைக்குச் சான்று.

வ. உ. சி. சிறந்த தமிழ் அறிஞர்; பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது தமிழ்த் தொண்டு இன்று தான் நாட்டில் பரவத் தொடங்கியுள்ளது.

என் தந்தையார் பாட்டாளிகளின் தலைவரும் கூட. முதன் முதலாக ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு வித்திட்டு வெற்றி கண்டார். அரை நூற்றாண்டுக்கு முன்பு, எட்டுமணி நேர வேலைக்காக நடந்த வேலை நிறுத்தம் அது.

சீர்திருத்தப் பணிகள் என்றால் வ. உ. சி. க்குத் தித்திக்கும் தேன்போல. கண்ணிழந்த ஹரிஜனப் பெரியார் ஒருவரை வீட்டிலேயே வைத்துக் காத்தார்; ஹரிஜனப் பெரியார் சுவாமி சகஜானந்தரின் தமிழ்ப் புலமைக்கு என் தந்தையாரே குரு. விதவா விவாகங்களும், கலப்பு மணங்களும் நடத்தி வைத்து நாட்டுக்கு வழி காட்டினார்.

கடலாதிக்கத்தில் வெள்ளையரை முறியடிக்கக் கப்பல் ஓட்டியதுபோல, தொழில், வாணிபத் துறைகளில் நம்மவர் உயர நெசவுச் சாலையும், சுதேசிப் பண்டக சாலையும் கண்டவர்.

தமிழன் பல மொழிகளும் கற்கவேண்டும் என்ற கொள்கையுடையவர். தாமே பல மொழிகள் கற்றார். ஆங்கிலத்திலும், சமஸ்கிருதத்திலும் வல்லவர். மலையாள மொழியில், ஆங்கில நூல் ஒன்றை மொழிபெயர்த்திருக்கிறார். தெலுங்கும் தெரியும். உரைநடையிலும் கவிகள் புனைவதிலும் வல்லவர். 'வ. உ. சி. சுயசரிதை' அவர் கவி வன்மைக்குச் சான்று.

'இல்லை' என வந்தாருக்கு ஈயாமல் இருந்ததில்லை. ஒருநாள் உதவியவரையும் தாம் உள்ளளவும் போற்றினார். சிறை மீண்ட பின்பு தமக்கு வழக்கு உரைக்கும் உரிமை வாங்கித் தந்த வெள்ளை நீதிபதி 'வாலேஸ்' பெயரைத் தம் மகனுக்கு இட்டு நன்றி பாராட்டியவர். கடவுள் பற்று மிக்கவர். சைவ சித்தாந்தம் அவரது அறவாழ்வுத் திறவு கோல்.

பல துறைகளிலும் நிறை வாழ்வு வாழ்ந்த பெரியவர் வ. உ. சி.

★

# 11. சிறந்த நியாயவாதி

தமிழறிஞர் பரலி. சு. நெல்லையப்பர்

கப்பலோட்டிய தமிழனென்று நாடெங்கும் போற்றப்படும் தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை 1936ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி நம்மை விட்டுப் பிரிந்தார். அவரது திருநாளை இப்பொழுது நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். சிறந்த தேச பக்தரென்றும், அஞ்சா நெஞ்சம் படைத்த வீரரென்றும், சிறந்த பேச்சாளரென்றும் சுமார் ஐந்தாண்டுகள் சிறைக் கோட்டத்திலிருந்த தியாகியென்றும் மட்டும் கப்பலோட்டிய சிதம்பரம் பிள்ளையைப் பற்றி நாட்டு மக்கள் நன்றாய் அறிவார்கள்.

## சிறந்த நியாயவாதி

ஆனால், அவர் அந்தக் காலத்தில் "மெட்ரிக்குலேஷன்" பரீட்சை மட்டும் பாஸ் செய்து, இரண்டாவது வகுப்பு வக்கீலாக இருந்தபோதிலும் வழக்குகளை நடத்துவதில் திருநெல்வேலி ஜில்லாவில் பேர் பெற்ற நியாயவாதியாக விளங்கினார் என்பதைப் பலர் அறியார்கள். அந்தக் காலத்தில் அவருக்குப் பெரிய பேரையும் புகழையும் உண்டு பண்ணிய ஒரு வழக்கைப்பற்றி இன்னும் திருநெல்வேலி ஜில்லாவில் வயது முதிர்ந்த பெரியோர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

சிதம்பரனார் பெரும்பாலும் கிரிமினல் வழக்குகளில் எதிரி பக்கம் வக்கீலாகத் தோன்றி வாதிப்பது வழக்கம். குறுக்கு விசாரணை செய்வதில் பிள்ளையவர்கள் பெரிய நிபுணர். சமயோசிதமான கேள்விகள் கேட்பதில் அவருக்கு நிகரான வக்கீல் அந்தக் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் எவ

ரும் இல்லை, எத்தகைய சாட்சிகளும் அவரது குறுக்குக் கேள்விகளில் திணறிவிடுவர்.

## கொலை வழக்கில் விடுதலை

சிதம்பரனார் நடத்திய ஒரு கொலை வழக்கு குறிப்பிடத்தக்கது. குலசேகரநல்லூர் என்ற சிறு ஊரில் ஓர் ஆச்சாரி கொலையுண்டதாக வழக்கு. ஆச்சாரி பெரிய போக்கிரி. அவனை ஒரு வைக்கோல் போர் உள்ள களத்தில் துரத்தியடித்து வேட்டையாடிக் கொலை செய்ததாக வழக்கு. அதில் எதிரிகள் எழுவர். ஆறு எதிரிகள் முன்னரே அகப்பட்டுப் பல ஆண்டுகள் சிறைவாசத் தண்டனை அடைந்தனர்.

## ஆறுமுகத் தம்பிரான்

ஆனால், முதலாவது ஏதிரி அகப்படவில்லை. அவர் ஆறுமுகத் தம்பிரான் என்ற சாமியார். போலீசாரின் விண்ணப்பத்தில் அழகப்ப பிள்ளை என்று அவர் பெயர் கண்டிருந்தது. கொலை நடந்தவுடன் அவர் தம்மீது அநியாயமான பழி ஏற்படுமென்று அஞ்சி, திருவாவடுதுறை மடத்தில் சேர்ந்து சாமியாராகி ஆறுமுகத் தம்பிரான் என்ற பெயருடன் சிதம்பரத்தில் உள்ள திருவாவடுதுறை மடத்தின் தலைவராய்விட்டார்.

1903ஆம் ஆண்டு மே மாதத்தில் கொலை நடந்தது. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒட்டப்பிடாரம் போலீஸ் பெரிய கான்ஸ்டேபிள் சிதம்பரம் பிள்ளையென்பவர் மணியாச்சி ஸ்டேஷனில் தம்பிரானைக் கைது செய்தார். கைதி ஒட்டப்பிடாரம் சப் ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டார். அந்தக் காலத்தில் அங்கே பஞ்சாபகேச ஐயர் பி.ஏ., பி.எல். என்பவர் சப் மாஜிஸ்திரேட்டாயிருந்தார். அவர் மிகவும் திறமைசாலி! ஆனால், லஞ்சப் பழக்கம்

இல்லாதவராயிருந்தால் அவர் பெரிய பதவிகளை அடைந்திருப்பார். கொலை வழக்கு இந்த பஞ்சாப கேச ஐயரிடம் விசாரணைக்கு வந்தது. போலீஸாரைத் தவிர மற்ற எல்லோரும் தம்பிரானை நிரபராதி என்று சொன்னுர்கள். அவ்வாறிருந்தும் அவர் தம்பிரானை ஜாமீனில் விடுதலை செய்ய மறுத்துவிட்டார். அதற்குக் காரணம் அந்தக் காலத்தில் பலவாருக சொல்லிக்கொண்டார்கள்.

## சிதம்பரனுர் தோன்றல்

தம்பிரான் சிதம்பரனுரின் உறவினர், மைத்துனர் முறை. மேலும் பஞ்சாபகேச ஐயரை மற நெறியில் செல்லாது அற நெறியில் ஒழுகுமாறு செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் இருந்தது. அந்த வழக்கை நடத்த வேண்டுமென்று தம்பிரானின் உறவினர் ஒருவர் சிதம்பரனுரை வேண்டிக் கொள்ள அவர் அதற்கு இணங்கினுர். ஜில்லா மாஜிஸ்திரேட்டான கலெக்டரிடம் மனுக் கொடுத்ததில் அவர் அதனை தூத்துக்குடிக்கு ஜாயிண்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு மாற்றிவிட்டார்.

## வாலேஸ் துரையின் நேர்மை

அப்பொழுது தூத்துக்குடி சப் கலெக்டராக இருந்தவர் ஈ. எச். வாலேஸ் எம். ஏ., ஐ. ஸி. எஸ். அவர் சிதம்பரனுரின் சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்தை அடுத்த புதியம்புத்தூரில் வழக்கை விசாரணை செய்யத் தொடங்கினுர். இரண்டு பக்கம் கட்சிக்காரர்களும், சாட்சிக்காரர்களும், உறவினர்களும், நண்பர்களுமாகச் சேர்ந்த கூட்டம் ஒரு திருவிழாப் போலிருந்தது. சர்க்கார் தரப்பில், மதுரை வக்கீல் ரங்காச்சாரியும் திருநெல்வேலி வக்கீல் பழனியாண்டி முதலியாரும் ஸ்பெஷல் பப்ளிக் பிராசிக்யூட்டர்களாகத் தோன்றி வாதித்தனர். வாதி பக்கம் சாட்சி விசாரணை தொடங்கியது.

அவர்களைச் சிதம்பரனார் குறுக்கு விசாரணையில் திணற அடித்தார். போலீசார்கூடக் குறுக்கு விசாரணையில் தைரியமாகப் பதில் சொல்ல முடியாமல் விழித்தார்கள். ஒன்றிருக்க ஒன்றைச் சொன்னார்கள்.

## விடுதலை

வாலேஸ் துறைக்கு வழக்கின் போக்குத் தெரிந்துவிட்டது. எதிரி பக்கம் சாட்சி விசாரணையில்லாமலே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தம்பிரானும் விடுதலை அடைந்தார்.

இந்த வழக்கை ஆதிமுதல் கவனித்துக்கொண்டிருந்த உதவி போலீஸ் சூப்பரிண்டெண்டெண்ட் சிதம்பரனாரின் நியாய வாதத்தையும் வாக்கு வன்மையையும் கண்டு வியந்து அவரது கையைப் பிடித்துக் குலுக்கித் தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். இந்த பிளாக்ஸ் டோன் பிற்காலத்தில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி பெற்றார்.

அந்தக் காலத்தில் பெருங் கிளர்ச்சியை விளைவித்திருத்த இந்தக் கொலை வழக்கின் முடிவு சிதம்பரனாரின் புகழைத் திருநெல்வேலி ஜில்லாவில் அதிகப்படுத்தியது. தூய வெண்ணீறு அணிந்து, ஆகத்தில் அக்க மணி புனைந்து, உருவின் மிக்க உடம்புகொண்ட சடைமுடித்தம்பிரான் சுவாமிகள் சில ஆண்டுகளுக்குப் பின்னர் தமக்கு நன்றி செய்த சிதம்பரனாருக்குச் சிதம்பரத்தில் ஒருசிறந்த விருந்து அளித்தார். பிற்காலத்தில் சிதம்பரனார் சிறை புகுந்து விடுதலை அடைந்தபோது சென்னையில் அவரைப் பரிவுடன் வரவேற்று அவருக்குப் பொன்னாடை புனைந்து போற்றியவரும் இந்த ஆறுமுகத் தம்பிரானேயாவர்.

மேற்கூறிய கொலே வழக்கை விசாரணை செய்து நீதிபுரிந்த வாலேஸ் துரைதான் பிற்காலத்தில் சிதம்பரனுர் மீது ராஜத் துவேஷ வழக்குகள் ஏற்பட்டபொழுது அவற்றை விசாரித்து 'கமிட்' செய்த ஜில்லா மாஜிஸ்டிரேட் ஆவார். பின்னும் பல ஆண்டுகள் கழித்து இதே வாலேஸ்துரை சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியாக அமர்ந்திருந்தார். அப்பொழுது சிதம்பரனுர் சிறைக் கோட்டத்திலிருந்து விடுதலேயடைந்து சென்னை வந்தார். பிழைப்புக்கு வேறு வழியில்லாதமையால் உத்தியோகத்தையே திரும்பவும் நாடினுர். அரசாங்கத்தை எதிர்த்துச் சிறை சென்ற ஒருவருக்கு மீண்டும் வக்கீல் பதவி கிடைப்பது கஷ்டமாயிருந்தது. ஆனுல் சிதம்பரனுரின் விண்ணப்பத்தைக் கண்ட வாலேஸ் துரை அதனை அனுதாபத்துடன் ஆதரித்து அவருக்கு வக்கீல் உத்தியோகம் கிடைக்கும்படி செய்தார். அந்த வாலேஸ் துரையின் பேரைத் தமது மைந்தர்களில் ஒருவருக்கு இட்டு பிள்ளையவர்கள் தமது பெரு நன்றியை விளங்கச் செய்தார். பிள்ளையவர்களின் கடைசி புதல்வரும் வாலேஸ்துரையின் பேர் கொண்டவருமான வாலேஸ்வரன் இன்று அரசாங்கத்தில் சேவை செய்து வருகிறுர்.

★

## 12. திலகரிடம் விண்ணப்பம்

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

"......திலகர் அமிர்தரசஸ் காங்கிரஸ் போவதற்கு முன்னர் அவரது வருகையைச் சென்னை நாடியது. அவர் நாட்டமும் சென்னையை நோக்கியது.

திலகரைப் பிரம்பூரில் (17-2-1919) பார்க்கத் தேச பக்தர் சிதம்பரம் பிள்ளையும், சுப்பராய காமத்தும், யானும் வேறு சிலரும் சென்றோம். அக்காலத்தில் பம்பாய் மெயில் பிரம்பூரில் நிற்கும். சிதம்பரம் பிள்ளையும் மாங்களும் லோகமான்யரைக் கண்டோம்; அளவளாவினோம். சிதம்பரம் பிள்ளை, 'இது தொழிலாளர் காலம்; தாங்கள் செல்வர். மாடியில் தங்கினால் ஏழை மக்கள் தங்களைக் காண இயலாது வருந்துவார்கள். ஆதலால் தாங்கள் எங்களில் ஒருவர் குடிலில் தங்குவதற்கு உளங்கொள்ளல் வேண்டும்' என்று பெருந்தலைவரிடம் விண்ணப்பஞ் செய்தார். 'சிதம்பரம்! எனக்கா விண்ணப்பம்? எனக்கு எந்தக் குடிசையாயிருந்தால் என்ன?' என்று பதில் பிறந்தது. எங்கட்கு ஆனந்தம் பொங்கியது."

★

# 13. வ. உ. சி.யின் கனவு

தலைவர் ம. பொ. சிவஞானம்

நவம்பர் 18ஆம் நாள், வீரர் வ. உ. சிதம்பரனாரின் நினைவு நாளாகும். ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு வித்திட்ட சிதம்பரனாரின் திருநாளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி வெற்றி கண்ட தமிழ் மக்கள், முன்னிலும் பன்மடங்கு சிறப்பாகக் கொண்டாடக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

சிதம்பரனார் நாத்திகரல்லர்; ஆத்திகர். ஆனால், அவர் கண்ட சமயம் மக்கள் சமுதாயம். அவர் போற்றிய வேதம் திருக்குறள். அவர் கடைப்பிடித்த சமய நெறி எம்மதத்தையும் சம்மதமாகக் கொள்ளும் சன்மார்க்க நெறி.

வ. உ. சி.க்கு கடவுள் நம்பிக்கையுண்டு; ஆனால், தேசத்தையே தெய்வமாகக் கொண்டு வழிபட்டார் அப் பெரியார். உயிர் விடும் தருவாயில் திருவாசகம் பாடச் சொல்லிக் கேட்பர் சைவ சமயத்தவர். அப்படியே, பிரபந்தம் ஓதக் கேட்பர் வைணவர்கள். ஆனால், சிதம்பரனார், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார். அவர், தமது ஆவி பிரியும்போதும் கோடானு கோடி ஏழை மக்கள் வறுமையால் வாடும் நிலையை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறி அழுதார்.

வ. உ. சி. சாதி. வேற்றுமைகளைச் சகித்துக் கொள்ளாதவர். அந்தணர் என்றும் அல்லாதார் என்றும் பிரிந்து நின்று பிணக்குக் கொள்வதை அவர் விரும்பினாரில்லை. தேசபக்தியின் பெயரால் பிராமணர் செல்வாக்கு காங்கிரசில் அதிகரித்து வருவதை அவர் கண்டித்ததுண்டு. ஆனால்,

அதே நேரத்தில் பிராமணரல்லாத (ஜஸ்டிஸ்) கட்சியினரின் தேசத் துரோகச் செயல்களையும் அவர் கண்டிக்கத் தயங்கவில்லை. இதனால் தேசபக்த பிராமணர் சிலர், வ. உ. சி. யை வகுப்புவாதி என்று வசை பாடினர். பிராமணரல்லாதாரில் பலர், அவரை பார்ப்பனருக்குத் துணை புரிபவர் என்றும் பழி தூற்றினர்.

"பிராமண அபிமானி என்று பிராமணரல்லாத சிறுவர் சிலராலும், 'வஞ்சக சொருபி' என்று பிராமணர் ஒருவராலும் அநியாயமாகப் பழிக்கப் பெறுபவன் நான்" என்று, 1927ஆம் சேலம் ஜில்லா அரசியல் மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசுகையில் வ. உ. சி. வாய்விட்டுக் கூறி வருந்தினார். அவரது நடுநிலைமை உள்ளத்தை அறிந்துகொள்ள முடியாத வகுப்புவாத— தேசத் துரோகக் கூட்டத்தினர், சிதம்பரனார்மீது பழி கூறி அவரது அரசியல் வாழ்வையே பாழ்படுத்தினர்.

காந்தியடிகளிடம் அவருக்கு வேறு எவரையும் விட அளவு கடந்த மதிப்பு உண்டு. அடிகளாரின் ஒழுக்க வாழ்வு அவரது உள்ளத்தைக் கவர்ந்தது. என்றாலும் காந்தீயத்தின் ஆணிவேர்களான அஹிம்சை, ஒத்துழையாமை என்ற தத்துவங்கள் வ. உ. சி. க்குப் பிடிக்கவில்லை. சிதம்பரனார், திலகரின் மெய்த்தொண்டர். அவரையே அன்னை, குரு, தெய்வம் ஆகிய எல்லாமாகக் கொண்டவர். எனவே, திலகரின் கொள்கைக்கு எதிராகக் கிளம்பிய காந்தீயத்தை அவர் ஏற்க மறுத்தது இயற்கையே. ஆனால், காந்தீயத்தின் மேலிருந்த வெறுப்பு, காங்கிரஸ் வெறுப்பாக இறுதிவரை மாறவே இல்லை. அவர், ஆயுள் வரை காங்கிரஸ் மகாசபை ஒன்றையே தமது அரசியல் கட்சியாகக் கொண்டு அதன் வளர்ச்சிக்குத் துணை செய்து வந்தார்.

தமது கொள்கையை அடியோடு கண்டித்த நிலையிலும், வ. உ. சி. மீது காந்தியடிகள் அன்பு செலுத்தி வந்தார். காந்தியடிகள் வ. உ. சி. யின் உள்ளத்தை அறிந்த உத்தமர். அடிகளார் தென் ஞப்பிரிக்காவிலிருந்த காலந்தொட்டுப் பிள்ளை யவர்கள் உயிர் நீத்த காலம்வரை இருவரும் ஒருவர் மீது ஒருவர் இடையருத அன்பு செலுத்தி வந்தனர்.

வ. உ. சி. அரசியல் தலைவர் என்பதை மட்டுமே தமிழகம் அறியும். ஆனல், அவர் சிறந்த கலைஞர் என்பதை அறிந்தோர் மிகச் சிலரேயாவர். "அரசியலுக்கும் கலைக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்கும் தலைவர்கள் பலரை நாம் பார்த்து வருகிறேம். பெரும்பாலான அரசியல் வாதிகளுக்கும் கலைஞர்களுக்கும் அரசியல் உள்ளம் அமைவதில்லை. கலையுணர்வற்ற அரசியல் வாழ்வில் கலக உணர்வே நிறைந்திருக்கும். அரசியல் ஞானமற்ற கலை வாழ்வு, உலகியலுக்கு ஒதுக்கிடமாகும். இதை அ ர சி ய ல் வாதிகளும், கலைஞர்களும் உணர்ந்துகொள்ளும் நாளே தமிழகத்துக்கு நன்ஞளாகும்.

வீரச் சிதம்பரனுர், வெறும் அரசியல் வாதி மட்டுமல்ல; சிறந்த கலைஞருங்கூட. பேச்சுக் கலை, அவரது உடன் பிறப்பு. இலக்கியக்கலை வ. உ. சி. யின் இணைபிரியாத் தோழன். காவியக் கலை, சிதம்பரனுரின் அல்லலைத் துடைக்கும் இல்லக் கிழத்தி. நாடகக் கலை, அவரது உள்ளத்தைக் கவரும் செல்லக் குழந்தை. வீரக்கலை, அவருக்கு மரபு வழிவந்த மதிப்பற்ற சொத்து. ஆம், கலைப்பண்புகளையே குடும்பமெனக் கொண்டு வாழ்வு நடத்திய கலைஞராவார் வ. உ. சி.

சிதப்பரனுர், பொருளாதாரத் துறையிலே பல்வேறு 'இஸங்'கள் காட்டும் பாதை எதிலும் சென்றவரல்லர். இந்தியாவின் அக்கால நிலையில் அதை

எதிர்பார்க்கவும் முடியாது. என்றுலும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்திற்குப் பாதை போட்டுத் தந்தவர் வ. உ. சி. இந்தியாவிலேயே முதன் முதல் நடந்த அரசியல் கலப்புடைய வேலை நிறுத்தம், தூத்துக்குடியில் வ. உ. சி. நடத்திய 'ஹார்வி மில்' தொழிலாளர் வேலை நிறுத்தமேயாகும்.

இந்தியாவில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட சென்னைத் தொழிலாளர் சங்கத்திலும் அதிக அளவுக்குப் பங்கு கொண்டிருந்தார் வ. உ. சி. பெரம்பூர் ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவராயிருந்து பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு அவர் பட்டபாடு கொஞ்சமன்று.

இன்றையத் தேசியவாதிகளில் மிகப் பெரும் பாலோர் தாய் மொழிப் பற்று அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். தலைவர்களுங்கூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனுல், தேசீய இயக்கத்தின் ஆரம்பகால வரலாறு இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். துன்பமொன்றே தங்களைத் தொடர்ந்து வந்த காலத்திலும் பழங்காலத் தேசபக்தர்கள் மாண்பு மிக்க தமிழை மறந்தார்களில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு அல்லலுற்ற வ. உ. சு. ஐயர் தமிழிலே நல்ல புலமை வாய்ந்தவர். கம்ப ராமாயணத்துக்கு அவர் எழுதியுள்ள ஆராய்ச்சியுரை, ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ளத் தக்கதாகும். கம்பனது புலமைத் திறமையை வாயார வாழ்த்துபவர் வ.வே.சு. ஐயர். அதே நேரத்தில் அதில் காணப்படும் குற்றங் குறைகளையும் அறிவுக் கண்கொண்டு ஆராய்ந்து ஆபாசமற்ற முறையில் வெளிப்படுத்திய பெருமை வ. வே. சு. ஐயருக்கு உண்டு.

கவியரசர் பாரதியார் அரசியல் மேடையில் தமிழுக்கு சிறப்புத் தேடித் தந்த முதல் புலவராவார்.

தமிழின் துணைக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப் புக்குப் படை திரட்டிய பெருமை பாரதியாரின் தனி யுரிமை. 'கம்பர்—வள்ளுவர் இளங்கோ' இம்மூவ ருக்கும் இணையான புலவர் இவ்வுலகத்தில் இல்லை. ' உலக மொழிகளிலே தமிழ் ஒன்றே உயர்ந்த மொழி ' என்றெல்லாம் பெருமை பேசியவர் பாரதி. இவ்வாறு பிற்காலத்தில் வ. வே. சு. ஐயரும், பாரதி யாரும் தேசியத் துறையிலே தமிழுக்குப் பெருமை தேடித்தரக் காரணமாயிருந்தவர் சிதம்பரனுர் என் ருல் மிகையன்று.

சிறை வாழ்க்கையே கொடுமையானது. அதி லும் செக்கிழுக்கும் வாழ்க்கை மிகமிகக் கொடுமை யானதென்பதை மக்கள் அறிவர். ஆனுல், சிதம் பரனுர் சிறைப்பட்டு செக்கிழுத்த நேரத்தி லும் தமிழை மறந்தாரில்லை. மெய்யறம் போன்ற புது நூல்கள் பலவற்றை இயற்றினுர். ஜேம்ஸ் ஆலன் ஆங்கிலத்தில் எழுதிய ஆன்மீக நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். சிறை யில் தன்னேடு வாழ்ந்துவந்த கிரிமினல் கைதிக ளுக்குத் தமிழ் இலக்கியங்களைக் கற்றுத் தந்தார்.

''இலக்கணத்தைத் தீயிலிட்டுக் கொளுத்துங் கள்!'' என்று பேசும், 'பேராசிரியர்கள்' பெருகி வரும் காலம் இது! வ. உ. சிதம்பரனுரோ, இலக்கி யத்தையும் இலக்கணத்தையும் தமது இரு கண்க ளெனக் கொண்டவர். ' தொல்காப்பியம் ' என்ற நூலுக்குப் புத்துரை இயற்றினுர் இப்புலவர் பெரு மான்.

'தொல்காப்பியம்,' 'திருக்குறள்' ஆகிய இரு தமிழ் நூல்களையும் கற்றுணராத எவரும் தமிழரல் லர் என்று அவர் அடிக்கடி கூறுவதுண்டு. தமி ழால் ஏடெழுதிப் பொருள் சேர்ப்பவர் பலர்; தமிழை வளர்ப்பதாகத் தலை மயங்கிப்பேசிப் புகழ் சேர்ப்பவர் சிலர். தமிழைக் கட்சிச் சண்டைக்குக்

கருவியாகக் கொள்வோருமுண்டு. ஆனால் வ. உ. சிதம்பரனார், தமிழைக் கொண்டு வயிறு வளர்த்தா ரில்லை. தமிழை வளர்ப்பதாகவும் தற்பெருமை கொள்ளவில்லை. "தமிழ் என் அறிவை வளர்க்கி றது; தமிழ் எனக்கு வாழ்வளிக்கிறது" என்று அவர் கூறாத மேடையில்லை.

சிதம்பரனார் அரசியல் தலைவர். அறிவு மிக்க புலவர், ஆத்மஞானி, போராட்டவாதி, கருணையுள் ளம் படைத்த வள்ளல்! இப்படி எத்தனையோ அடைமொழிகளை அவரது பெயருடன் சேர்த்துப் போற்றிப் புகழலாம். ஆனால், இவை எல்லாவற் றையும்விடக் "கப்பலோட்டிய தமிழன்" என்ற பெயரே வீரச் சிதம்பரனாருக்கு சிறப்பளிப்பதாகும். ஏனெனில், அது ஒன்றே அவர் செயற்கரிய செய்த தைக் குறிக்கிறது.

சிதம்பரனாருக்கு முன்னே பல நூற்றாண்டுகள் தமிழர் எவரும் தூரதேசங்களுக்குக் கப்பல் விடத் துணிந்ததில்லை. அதிலும், 'சுதேசியம் வாழ்க' என்று கூறுவதே 'ராஜத் துரோக'மாயிருந்த காலத் தில், சொந்தமாகக் கம்பெனி நிறுவிக் கப்பல்களை வாங்கி, ஏகாதிபத்தியக் கம்பெனியுடன் போட்டி யிடுவதென்பது எளிதல்ல.

வெள்ளையர்களை-இல்லை, ஏகாதிபத்திய வெறி யர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற விரும்பி னார் வ. உ. சி. அதன் பலன் இரண்டு ஜன்ம தண் டனை! ஆனால், வீரச் சிதம்பரம் பட்ட துன்பம் வீண் போகவில்லை. ஆகஸ்ட் பதினைந்தில் வெள்ளை யர் ஆட்சி வெளியேறக் கண்டோம்.

வீரர் வ. உ. சி. வெள்ளையரை வெளியேற்றி சுயாட்சி பெறுவதோடு, அவர் தம் சுரண்டலையும் ஒழிக்கக் கருதியே கப்பலோட்டினார். அதன் விளை வாக, வந்தவருக்கெல்லாம் இல்லையென்னாது தந்த

வள்ளல் சிதம்பரம் வறியரானார். மாற்றானுக்கு எதிராகக் கப்பல் ஓட்டிய மறத் தமிழர் சிதம்பரம், சென்னை பெரம்பூரில் மண்ணெண்ணெய் விற்றுப் பிழைத்தார். ஆங்கிலேயரின் கொள்ளையை அகற்றப் பாடுபட்ட சிதம்பரம், சிந்தாதிரிப்பேட்டையில் அரிசிக்கடை வைத்துக் காலந்தள்ளினார்.

மறத் தமிழர் வ. உ. சி. இந்திய உபகண்டம் முழுவதையுமே ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபட்டார். விடுதலைபெற்ற சுதந்தர இந்தியாவில் அவரது தாயகமான தமிழகம் சுயாட்சியுடையதாக இருக்க வேண்டுமென்றே விரும்பினார். இதை அவர் இயற்றிய தனிப் பாடல் திரட்டில், "கோனாட்சி நீக்கி குடியாட்சி ஏற்படுத்தி நானாட்சி செய்வேன்" என்று நாடறியக் கூறினார். ஆம், வ. உ. சி. கண்ட இந்தக் கனவு இன்னும் நனவாகவில்லை. ஆனால், அது நனவாகும் காலம் நெருங்கி வருகிறது. தமிழரசுக் கழகம் வ. உ. சிதம்பரனாரின் கனவை நனவாக்கும் அமைப்பு; வ. உ. சியின் வரலாறு, தமிழரசுப் படையினர் செல்ல வேண்டிய திசை காட்டும் கலங்கரை விளக்கு.

வாழ்க சிதம்பரனார் புகழ்!

★

## 14. பெரியார்

டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார்

'தென்னாட்டுத் திலகர்' எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ்சென்ற திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களைப் புதிய இந்தியா முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து மக்கள் 'அடிமை மோகத்தில்' ஆழ்ந்து மடிந்திருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந்தலைவருள் ஒருவர் இப்பெரியார். தென்னிந்திய உரிமைப் போர் மறவருள் முதல்வர். இவர் தமிழகத்தில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் பொதுநலம் பேணப் பிறந்த பெரியார். இளம் பருவமுதல் அஞ்சாநெஞ்சராய் பெருமையும் உரனும் பிறங்க வளர்ந்தவர். ஆங்கிலமறியாமல் ஓங்குபுகழோடு வக்கீல் வேலைப் பார்த்த உலகநாத பிள்ளையவர்களின் புதல்வர். ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி ஊர்களில் குற்றநீதி மன்றங்களில் திறம்பட வாதுபுரிந்து, பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

காளைப் பருவத்தில், "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து" வாழ்ந்தார். கூர்த்த மதியும் சீர்த்த நடுநிலை உணர்வும் வாய்த்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்கால் பயின்று சொல்வன்மையும்நல்லியல்பும் நிரம்பி,கற்றோர் களிக்கமற்றோரும் மகிழச் சல்லாபிக்க வல்லவர். நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம் திறம்புபவர் அஞ்ச மறத்தோடெதிர்த்து, எளியாரை ஆதரிக்கும் தறுகணாளர். அறிவோடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத் தாலடர்த்து, சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர் தென்னாட்டுத்

தேசத் தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். ஆசுகவி அரசரான கந்தசாமிக் கவிராயர், மதிநுட்பம் நூலோடு சிறக்க வாழ்ந்த அரசஞ் சண்முகனுர் போன்ற புலவருக்கும், நிதிக் கிழவரான செல்வருக்கும் நண்பர். சூரத்துக் காங்கிரசில் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது காத்த வீரர்.

இந்திய நாட்டில், பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி நம்மவர் முதலால் ஓட்ட நினைத்து, முதன் முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல்' கம்பெனி கூட்டிய தனிப் பெருமை இவருடைமை. வாணிப யாத்திரை மரக்கலக் கம்பெனிகளிலெல்லாம் உலகத்திலேயே பெரிதான பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே, ஆங்கிலர் கலங்களில் ஆளும், சரக்கும் ஏருதபடி வெற்றி கண்டார். தலைக்கு 3½ ரூபாய்க் கட்டணத்தை 4 அணு ஆக்கியும், சரக்கு ஏற்றுமதிக் கூலியை நாலிலொன்ருய்க் குறைத்தும், அதிகாரிகளின் உதவி ஆதரவு முற்றும் பெற்றும் ஏருமல், பிள்ளையவர்கள் கம்பெனிக் கப்பலில் முழுக் கட்டணதாரணை கொடுத்து நம்மவர் எல்லாரும் போக்குவரவு செய்ய வைத்த அரிய வினைத்திறம் — பிள்ளையவர்களின் மதிவலியும், முயற்சித் திறமும் மக்கள் மதிப்பும் காட்டும் நல்ல சான்ருகும். ஒற்றுமையில்லாத நம்மவரை ஒருமனத்தராய் ஒழுக வைத்த இவர்களின் தேசத் தொண்டை வியவாத வெள்ளையர்களில்லை என்ருல், இவர்களின் பெருமைக்குப் பிற சான்று தேடுவானேன்? நட்டமும் தோல்வியும் நாள்தோறும் பெருகக் கண்டு புழுங்கிக் கொதித்து, பிள்ளையவர்களைப் புகழ்ச் சிறைப்படுத்தி, கப்பல் கம்பெனியையும் உலையச் செய்த அதிகாரிகளின் சதியாலோசனை, கொடுமைகள் முனிவரையும் முனியச் செய்யும். பிள்ளையவர்

களுக்கு ஜன்மச் சிறை விதித்த ஆங்கில நீதிபரின் கொடுமைக்கும், இழிவுணர்ச்சிக்கும் அக்காலத்திய இந்திய மந்திரியான மார்லிப் பிரபு வெட்கப்பட்டு உயர்நீதி மன்ற அதிபர் வேலைக்கு உத்திரவு பெற் றிருந்த ஆங்கிலேயரை அவ்வுத்திரவை மாற்றி அவர் ஆயுள்வரை நீதிபதி வேலைக்கே அருகரில்லை என விலக்கின செய்தி உலகறிந்த உண்மை.

இப்பெருங்குணச் செல்வர் சிறையிற்பட்ட அல்லல்களுக்கு எல்லையில்லை. கொசுவலைக் கட்டிலோடு வேண்டுணவு கொண்டு சுக வாழ்வு கொள் ளும் தற்காலத் தேச அன்பர் மேல் வகுப்புச் சிறை வாசம் அக்காலமறியாதது. கொலை, வழிப்பறிக் குற்றவாளிகளுக்கிடையே அவர்களுக்கொப்ப, கல்லுடைப்பு—செக்காட்டல்—மண்வெட்டு முதலிய கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக்கூழ் கறியின்றிச் சட்டியில் வாங்கியுண் ணும் கொடுங் குற்றவாளிகளின் வாழ்வு பிள்ளை யவர்களின் சிறைவாசம். அது போதாமல், தண்டனை அவதி கடந்த பின்னும் முன்னைய வக்கீல் தொழில் செய்யவொட்டாமல் வறுமையும், கவலையும் வழங்கப்பட்டனர். உடல்நலிவும், உளத் தளர்வும், இடையருத் துணையாக, எஞ்சிய கால முழுதும் இருந்து இறைவனடி சேர்ந்த வள்ளல் இவர். தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழி வகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாளெல்லாம் தமிழருக்கு வீணுளாகும்.

★

# 15. வீரச் சிதம்பரனார்

தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி இந் நாளில் எந்நாட்டாரும் அறிந்த துறைமுகம். அந் நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டார் சிதம்பரனார். அவர் தங்கலம் துறந்த தனிப் பெருந் தொண்டர். அன்னார் செய்துள்ள சேவையை நினைத்தால் உடல் சிலிர்க்கும்; உயிர் நிமிர்ந்து உணர்ச்சி பொங்கும்; உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருகும். 'இந்தியக் கடலாட்சி எமதே' எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறி மயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். தென்னாட்டுத் திலகர் எனத் திகழ்ந்த வர் அவர். பாட்டாளி மக்களுக்குப் பரிந்து பேசிய தற்காக—நாட்டிலே சுதந்தர உணர்ச்சியை ஊட்டி யதற்காக—அவரைச் சிறைக் கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறைவாசம் தீர்ந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார் சிதம்பரனார். ஒருநாள் மாலைப்பொழுது துறை முகத்தின் அருகே உலாவச் சென்றார். பழைய நினைவுகள் எல்லாம் அவர் மனத்திலே படர்ந்தன. அக்கடற்கரையிலே நின்று அவர் பேசலுற்றார்:—

"தென்னாட்டுத் துறைமுகமே! முந்நூறு ஆண்டுகளாக நீயே இம் முத்துக் கரையில் முதன்மைபெற்று விளங்குகின்றாய்! முன்னாளில் வளமுற்றிருந்த கொற்கைப் பெருந்துறையின் வழித்தோன்றல் நீயே என்று உணர்ந்து உன்னை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன். ஆயினும் அக்காலத் துறைமுகத்தின் மாட்சியையும் இக் காலத்திற் காணும் காட்சியையும் நினைத்துப் பார்க்கும்பொழுது, என் நெஞ்சம் குமுறுகின்றதே!

பாரறிந்த கொற்கைத் துறைமுகத்திலே பாண்டிய னுடைய மீனக்கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைக் கடல் முத்து வளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர் மரக்கல வாணிகத்தால் வளம் பெற்று மாடமாளிகைகளில் வாழ்ந்தார்கள். இது, சென்ற காலத்தின் சிறப்பு. இன்று மீனக் கொடி எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இங்கே பறக்கின்றது? பரங்கியர் கப்பலன்றோ எங்கும் பரந்து திரிகின்றது? கொள்ளை லாபம் அடிக்கின்ற வெள்ளையர் கப்பலில் கூலி வேலை செய்கின்றனர் நம் நாட்டுமக்கள்! சொந்த நாட்டிலே வந்தவர்க்கு அடிமை செய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? 'வசை யொழிய வாழ்வாரே வாழ்வார்' என்ற வள்ளுவர் வாய் மொழியை மறக்கலாமா?

"வளமார்ந்த துறைமுகமே! இந்த வசையை ஒழிப்பதற்காக இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி யொன்று இருபதாண்டுகளுக்கு முன் உருவாயிற்று. பாரத நாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்கு கொண்டார்கள். பழங் காலப் பாண்டியரைப்போல, மதுரைமா நகரிலே தமிழ்ச் சங்கம் அமைத்து, புலவர் பாடும் புகழுடையவராய் விளங்கிய பாண்டித்துரைத் தேவர் அக் கம்பெனியின் தலைவரானர். அதன் செயலாளனுக அமைந்து பணி செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. கம்பெனியார் வாங்கிய சுதேசக் கப்பல் துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக்கப்பல் இங்கிருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், இன்ப வெள்ளம் என் உள்ளத்திலே பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

"வாணிக மாமணியே! அன்று முதல் சுதேசக் கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிகம் தளர்ந்தது. அது கண்டு அவர் உள்ளம்

எரிந்தது. வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளை அன்னர் கையாளத் தலைப்பட்டார். சுதேசக் கம்பெனி வேலையினின்றும் நான் விலகிக் கொண்டால் நூரு யிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுக மாகக் கூறினர். எனக்கு உற்ற துணையாக நின்று ஊக்கம் தந்த நண்பர்களைப் பலவாறு பயமுறுத் தினர். இவையெல்லாம் பயனற்று ஒழிந்த நிலை யிலே அடக்கு முறையைக் கையாளக் கருதி அர சாங்கத்தின் உதவியை நாடினர்.

"பரங்கியர் ஆளும் துறையே! ஆங்கில அர சாங்கம் சர்வ வல்லமையுடையதென்றும், அதை அசைக்க எவராலும் ஆகாது என்றும் அப்போது பொதுமக்கள் எண்ணியிருந்தார்கள். அதனுல் அடிமைத்தனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்நாட்டு மக்களிடையே வளர்ந் தது. துரைத்தனத்தார் என்ன சொன்னுலும் எதிர்த்துப் பேசாமல், 'சார், சார்' என்று சலாமிட்டு, 'புத்தி புத்தி' என்று வாய் பொத்தி, 'சரி, சரி' என்று சம்மதித்துத் தாளம் போடும் போலி அறி ஞர், பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்ந்தார் கள். அரசாங்கம் ஆட்டுவித்தால் அப் பதுமைகள் ஆடும்; எப்போதும், 'அரசு வாழ்க' என்று பாடும். இத்தகைய சூழ்நிலையிலே எழுந்தது சுதந்தர நாதம்! வந்தே மாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது; காட்டுக் கனல்போல் எங்கும் பரவிற்று. சுதந்தரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டிலே மார் தட்டி நின்ருர் மராட்டிய வீரர் ஒருவர். அவரே பாரத நாடு போற்றும் பாலகங்காதர திலகர். தென் ஞட்டிலே தோன்றினர் நாவீறுடைய நண்பர் பாரதியார். அவர் அஞ்சாத நெஞ்சினர், செஞ் சொற் கவிஞர். 'வந்தேமாதரம் என்போம், எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்' என்ற அழகிய பாட்டிசைத்து, நாட்டிலே ஆர்வத்தைத்

தட்டி எழுப்பினுர்; 'கொந்தே போயினும், வெந்தே மாயினும் 'வந்தே மாதரம்' என்னும் வீர மந்திரத்தை விடமாட்டோம்' என்று வீறுபெறக் கூறினுர்.

"புதுமை கொண்ட துறைமுகமே! அந்நாளில் 'வந்தேமாதரம்' என்ருல் வந்தது தொல்லே. அந்த வாசகத்தில் ஒரு வஞ்சகம் இருப்பதாக ஆங்கில அரசாங்கம் கருதிற்று. பொதுக் கூட்டங்களிலும், தொழிலாளர் கூட்டங்களிலும் நான் பேசும் பொழுது 'வந்தே மாதர'த்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக் கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்ருர்கள். உணர்ச்சி பெற்ருர்கள். உள்ளதைச் சொன்னுல் கள்ளமுடையவர் உள்ளம் எரியுமல்லவா? எரிவுற்ற அரசாங்கம் என்னே எதிரியாகக் கருதிற்று; என்மீது பலவகையான குற்றம் சாட்டிற்று. நாட்டின் அமைதியை நான் கெடுத்தேனும்! நல்ல முதலாளிமாருக்குத் தொல்லே கொடுத்தேனும்! வெள்ளேயர்மீது வெறுப்பை ஊட்டினேனும்! வீர சுதந்தரம் பெற வழி காட்டினேனும்!—வெள்ளேக் கோர்ட்டிலே இக் குற்ற விசாரணே விறுவிறுப்பாக நடந்தது. இரட்டைத் தீவாந்தர தண்டனே எனக்கு விதிக்கப்பட்டது. அப்பீல் கோர்ட்டிலே சிறைத்தண்டனேயாக மாறிற்று அத்தீர்ப்பு. ஆருண்டு கோவைச் சிறையிலும், கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தேன். என் உடல் சலித்தது. ஆயினும் உள்ளம் ஒரு நாளும் தளர்ந்ததில்லே; சிறைச்சாலேயை தவச்சாலேயாக நான் கருதினேன்; கை வருந்த மெய் வருந்தச் செய்த பணிகள் எல்லாம் தாய் நாட்டின் விடுதலேக்காகப் புரிந்த அருந்தவம் என்று எண்ணி உள்ளம் தழைத்தேன்.

"செல்வச் செழுந்துறையே! சிறைச் சாலேயில் என்னே கண்காணித்தவர் பலர், கடும்பணி

இட்டவர் பலர். அவரை நான் எந்நாளும் வெறுத்த தில்லை. ஆனால் முறை தவறி நடந்தவர்களை நான் எதிர்த்தேன்; வரை தவறிப் பேசியவர்களை வாயால் ஒறுத்தேன். ஒருநாள் மாலைப் பொழுது; உடல் நலிந்து, உள்ளம் தளர்ந்து சிறைக் கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்தான் ஒரு ஜெயிலர்; அதிகாரத் தோரணையில் நீட்டி நிமிர்ந்து கொண்டு, எனக்குச் சில புத்திமதி சொல்லத் தொடங்கினான். அப்போது என் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. 'அடே மடையா! நீயா எனக்குப் புத்தி சொல்பவன்? மூடு வாயை! உனக்கும் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் நான். உன்னுடைய கவர்னருக்கும், மன்னருக்கும் புத்தி சொல்வேன் நான்' என்று வேகமுறப் பேசினேன். மானமிழந்து, வாயிழந்து மறைந்தான் ஜெயிலர்.

''தமிழ்ப் பெருந்துறையே! உன் தாழ்விலும் வாழ்விலும் – எந்த நாளிலும் – என் தமிழ்த்தாயை நான் மறந்தறியேன்; இந்த நகரத்தில் வக்கீல் வேலை பார்த்து வளமுற வாழ்ந்த நாளில் வள்ளல் பாண்டித்துரைத் தேவரோடு உறவு கொண்டு, தமிழ் நூல்களைக் கற்றேன். அதனால் நான் அடைந்த நன்மைக்கு ஓர் அளவில்லை. சிறைச் சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத் தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ? தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். 'இன்னிலை'யைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில் ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை 'மனம்போல் வாழ்வு' என்று தமிழிலே மொழி பெயர்த்தேன். உயர்ந்த நூல்களிற் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்து கொள்ளு

மாறு 'மெய்யறிவு', 'மெய்யறம்' என்ற சிறு நூல்களை இயற்றினேன். இவற்றை என் தமிழ்த்தாயின் திருவடிகளிலே கையுறையாக வைத்தேன். சிறையிலிருந்து நாற்ற என் சிறு நூல்களையும், உவந்து ஏற்றுக்கொள்ளுமாறு செந்தமிழ்த் தாயின் திருவருளை வேண்டுகிறேன்.

''வருங்காலப் பெருவாழ்வே! காலம் கடிது சென்றது. என் சிறை வாழ்வு முடிந்தது. இங்கரை வந்தடைந்தேன். என் அருமைக் குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றேன். ஆயினும் என் ஆசைக் குழந்தையை—தேசக் கப்பலை—இத் துறைமுகத்தில் காணாது ஆருத் துயருற்றேன். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்று' என்று பரிதவித்தேன். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினேன். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்தரம் வந்தே தீரும். வீர சுதந்தர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரத நாட்டிலே.

''பாயக் காண்பது சுதந்தர வெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்''

என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?'' என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டகன்ருர் வீரச் சிதம்பரனர்.

# 16. நான் கண்ட வ. உ. சி.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

*1907*-ஆம்ஆண்டு. ஒருநாள் நான் கற்று வந்த இந்து கலாசாலையில் மாணுக்கரிடையே ஒரு பரபரப்பு உண்டாயிருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்குத் தூத்துக்குடியிலிருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப் போகிருர் என்று ஒரு வதந்தி.

குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந் திரளாகக் கூடியிருந்தார்கள். முற்போக்கு எண்ணமும், நாட்டுப் பற்றுமுள்ள மாணவர் சிலரும் அக்கூட்டத்தில் உண்டு. அக்கூட்டத்திற்கு நானும் கலாசாலையிலிருந்து நேரே போய்ச் சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனுல், ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்களேயல்லாமல் கலைந்து போகவில்லை. சுமார் 6 மணிக்கு மேல் தேசபக்தர் வந்து சேர்ந்தனர். அவர்கூட இரண்டொருவர் இருந்தார்கள். அவர்கள் இன்னுரென்று இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. ஒருவர் சுப்பிரமணிய சிவா என்று நினைக்கிறேன்.

குட்டையான சரீரம், உருண்ட கை கால்கள், உருண்டை முகம், நிறம் சற்று கருப்புத்தான். மேலே கோட்டும் அங்கவஸ்திரமும், தலையில் தலைப்பாகை. அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேச முடியும் என்றுதான் நினைத்தேன். ஆனுல், பேசத் தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது. அன்னிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேறவொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து நம் நாட்டுச்

செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவனும் தேசாபிமானமுடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இதைப்பற்றிப் பேசும் போது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று, கேட்போர் உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினார் என்று சொல்ல வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்கக் குதூகலமுற்றனர். நான் வ. உ. சி. யைக் கண்ட முதற்காட்சி இதுதான்.

திருநெல்வேலியில் மாணவர் உலகம் இரண்டுபட்டிருந்தது. வங்காளப் பிரிவினையைக் குறித்தும், ஆங்கிலத் துரைத்தனத்தைக் குறித்தும் சுதேசிய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைக் குறித்தும் வாக்குவாதங்களும், சச்சரவுகளும் ஏற்படாத நாளே இல்லையென்று சொல்லலாம். ஆனால், பொதுப்பட மாணவர்களில் பெரும்பாலோர் நாட்டுப்பற்று இருந்தவர்களாகவே இருந்தனர். அவர்களுடைய உள்ளத்திலே வ. உ. சி. நிரந்தரமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றுவிட்டார். மாணவர் உள்ளத்திற்போலவே, தொழிலாளிகளின் உள்ளத்திலும் வ. உ. சி. சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டனர். இவ்விரு பகுதியினர் இடத்தும் இவர் காட்டிய பேராதரவே இதற்குக் காரணமாகும்.

தூத்துக்குடியில் மில் தகராறுகளும், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கப்பல் ஸ்தாபனங்களும், இவ்விரண்டு வகையிலும் வ. உ. சி. எடுத்துக்கொண்ட பேருழைப்பும் இவரை ஒரு தேசப் பக்த வீரராகக் கருதும்படி செய்தன. இவருடைய அரிய குணங்கள் பலரையும் வசீகரித்தன. கள்ளங்கபடில்லாத திறந்த உள்ளமும் நேர்மையான பேச்சும் ஆழ்ந்த தேசபக்த உணர்ச்சியும் அவர் சென்ற இடங்களிலெல்லாம் இவருக்கு பெருஞ் சிறப்பை நல்கின.

முக்கியமாக தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் இவருக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது. இதனைத் தெரிந்த நெல்லையிலுள்ள வெள்ளை அதிகாரிகள் இவரைத் தண்டித்துச் சிறையிலிடக் கருதினர். போலிக் குற்றங்கள் இவர்மீது சாட்டி இவரை 1908 மார்ச்சு மாதத்தில் கைது செய்தனர். இவ்விபரம் நெல்லை நகரில் பரவியதும் பெரும் புரட்சியோ என்று கருதுமாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல மறுத்து ஊர்வலத்தில் பங்குகொண்டனர். அவ்வாறு சென்றவர்களில் நானும் ஒருவன். எனது உற்ற நண்பர்கள் இருவரும் என்னுடன் வந்தனர். இது நிகழ்ந்தது மார்ச் மாதம் 13-ஆம் தேதி.

பின்னர், நிகழ்ந்த தண்டனையும், அப்பீல்களும், முடிவாகத் தண்டனை குறைக்கப்பட்ட வரலாறும், ஆங்கிலப் பத்திரிகை உட்பட பல பத்திரிகைகளும் இத் தண்டனையைக் குறித்துக் கண்டித்து எழுதியும், லார்டு மார்லி, லார்டு மிண்டோவுக்கு இத் தண்டனையின் அநியாயத்தைக் குறித்து எழுதியுள்ள கடித விஷயமும் சரித்திரச் செய்திகள். இச் செய்திகளையெல்லாம் பத்திரிகைகளில் வாசித்து வ. உ. சி.யின் சிறை வாழ்க்கையில் என் மனம் பெரிதும் ஒன்றிவிட்டது. முக்கியமாக இவரைச் செக்கு இழுக்கும்படியாகச் செய்ததும், மலமகற்றும்படி வற்புறுத்தியதும் எனக்கும் என் போன்ற நோக்கு உடையவர்களுக்கும் பெரிதும் துன்பத்தை விளைத்தன. மக்களெல்லாம் அந்நிய அரசாட்சியின் கொடுமையைப் பழித்துக் கூறி அடங்காத கோபத்தைக் கொண்டிருந்தனர். நெல்லைப் புரட்சியில் ஆஷ் துரை செய்த அட்டூழியத்திற்கு அவரும் கொலைத் தண்டனை அடைந்தார்.

வ. உ. சி.யின் விடுதலையின் பின் அவர் ஒரு புது மனிதனாக மாறி விட்டார் என்றே சொல்ல

வேண்டும். இதுவரையும் தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தாய்மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன்வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினர். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக் கொண்டிருந்த சமயம். எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்து நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார். இலக்கணம் முதலிய விலங்குகளையெல்லாம் அவர் அறவே களைந்து எறிந்து விடுவார். துணிகரமும் உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகளிருத்தல் வேண்டும் என்ற பெருங் கருத்துக் கொண்டவர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் கண்ட உரை எளிதாக இருத்தல் கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்து நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக் கொடுக்க முன் வந்தார். என்னிடம் இளம்பூரணர் உரைப்பிரதி இருப்பதைத் தெரிந்து எனக்கு 1913-இல் ஒரு கடிதம் எழுதினார். இக்காலம் முதல் வ. உ. சி.யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாய் விட்டோம்.

தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை எழுதி வந்தார்கள். நானும் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் அவர்களால் வெளியிடப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் அவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ்விஷயத்தில் சென்னையில் அவர்களுக்கு உதவி புரிந்து வந்தவர்கள் திரு. செல்வகேசவராய முதலியார் முதலியவர்கள். நாங்கள் இலக்கியத் தோழர்களாயிருந்தும், பல ஆண்டுகளாக ஏகதேசமாக

வேனும் சந்தித்து வந்தோம் என்றுகூடக் கூற முடியாது கடிதப் போக்குவரத்திலேயே எங்கள் நட்பு அமைவுற்றது.

நெடுங் காலத்திற்குப் பின் 1926ஆம் ஆண்டு இறுதியில் நான் சென்னைக்குத் தமிழ் லெக்ஸிக்கன் பதிப்பாசிரியனுக வந்து சேர்ந்தேன். அப்போது வ. உ. சி. அவர்கள் வக்கீலாகத் தொழில் புரிய தூத்துக்குடிக்குச் சென்றுவிட்டார்கள். ஒரு முறை சென்னை மயிலாப்பூரில் இந்துமத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் வீட்டிற்கு நானும் எனது நண்பர் பி. ஸ்ரீ. ஆச்சாரியாவும் சென்றிருந்தோம். அப்பொழுது அங்கே வ. உ. சி. அவர்கள் இருந்தார்கள். அவர்களோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

எங்கள் பேச்சு முக்கியமாகத் திருக்குறளின் உரையைப்பற்றியதாக இருந்தது. பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாயுள்ளது எனவும், முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் இயற்றியன அல்ல எனவும் பிள்ளையவர்கள், அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஆவேசத்தோடு பேசினுர்கள். நான் அவர் பேச்சினிடையில் புகுந்து, சிறிதும் உணர்ச்சிக்கு இடங்கொடாதபடி, பரிமேலழகர் உரையின் போக்கைப்பற்றியும், பொதுப்பட அதன் சிறப்புகளைப்பற்றியும், முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பைப்பற்றியும், சில வார்த்தைகள் பேசினேன். எனது அமைதியும், தருக்க நெறி பிறழாத பேச்சும், ஆழ்ந்த தமிழ் உணர்ச்சியும், பிள்ளையவர்களைப் பிணித்துவிட்டன என்று சொல்லலாம். இதன் காரணமாக அவர்கள் என்னிடம் மிக்க அன்பும் நம்பிக்கையும் கொண்டுவிட்டார்கள். பல்வேறு வகையான எனது இலக்கிய முயற்சிகளைத் தெரிந்து, பெரிதும் ஆதரவு காட்டி

னார்கள். எனக்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகளை வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவ்வாறே அவர்கள் மறையும் வரை உதவி புரிந்தும் வந்தனர். மேற்குறித்த நிகழ்ச்சிக்குப் பிற்பாடு அவர்கள் சென்னைக்கு வரும் பொழுதெல்லாம் என்னைக் காணாது திரும்புவதில்லை. என்னோடு சில பொழுது தங்கியிருத்தலும் வழக்கம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மற்றை ஏழு இயல்களையும் வெளியிட வேண்டும் என்ற ஆத்திரம் வ. உ. சி. அவர்களுக்கு மிகுதியாயிருந்தது. அவற்றை நான் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் என்று வ. உ. சி. அவர்கள் விரும்பினார்கள்.

அவர்களிட்ட ஆணையை நானும் மேற்கொண்டு தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுமையும் பதிப்பித்தேன். அப்பதிப்பு எங்கள் இருவர் பெயராலும், வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு பதிப்பகத்திலிருந்து வெளிவந்துள்ளது. எனக்கு ஏடு தேடி அளிக்கும் உதவியை எவ்வளவு உள்ளன்போடு அவர்கள் செய்து வந்தார்கள் என்பது ஒரு செய்தியால் தெரிய வரும். பல அன்பர்களுக்கும் கடிதம் எழுதி ஏடுகளைப் பெற்று எனக்கு அனுப்பியதோடு, தாமே நேரில் என்னுடன் வந்து ஏடு பெற்றுக் கொடுத்ததும் உண்டு. ஒருமுறை ஆழ்வார் திருநகரில் அவர்களுக்கு நெருங்கிய உறவினரான தாயவலம் தீர்த்தான் கவிராயர் வமிசத்தினர் வீட்டிற்குத் தாம் தூத்துக்குடியில் இருந்து வருவதாகவும் அச்சமயம் என்னை அங்கு வரும்படியாகவும் கடிதம் எழுதி யிருந்தார்கள். விடுமுறைக் காலமானதால் எனக்கும் சௌகரியம் இருந்தது. அவர்கள் கடிதத்தின்படியே அங்குச் சென்று ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதித்து வேண்டும் சுவடிகளை எடுத்து வந்தேன்.

அவர்கள் இறுதியாகக் காட்டிய அன்பினைக் குறித்து மட்டும் இங்கே கூறி அமையலாம் என்று நினைக்கிறேன். 1936-இல் சென்னை சர்வகலாசாலையில் தமிழாராய்ச்சித்துறைத் தலைவரது நியமனம் நடைபெற இருந்தது. அதற்கு நான் முயன்று வந்தேன். எனது உற்ற நண்பர்கள்போல் பாவித்து ஒழுகி, யாதொரு தகுதியுமற்ற தமக்கு அந்த வேலை கிடைக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ததும் உண்டு. அச்சமயம் வ. உ. சி. அவர்கள் சென்னைக்கு வர நேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒருவாறு தெரிந்துகொண்டு, அவர் தாமே என்னிடம் வந்து, இம் முயற்சியில் நான் வெற்றி பெறவேண்டும் என்று எடுத்துக் கூறினுர். நாங்கள் இருவரும் பதிப்பித்த தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு அனுப்பவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னுர். உள்ளத் தூய்மையோடு கூறிய இந்த மொழிகள் எனக்குப் பெரியதோர் ஊக்கத்தைக் கொடுத்தன. இம் முயற்சியில் நான் வெற்றியும் பெற்றேன். இந் நிகழ்ச்சிக்குப் பின்பு விடுமுறைக் காலத்தில் நான் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி வந்து வ. உ. சி. அவர்களைச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் ஒருநாள் முழுவதும் கலந்து பேசிக்கொண்டிருந்தோம். இதுவே வ. உ. சி. அவர்கள் எனக்கு அளித்த கடைசிக் காட்சி.

வ. உ. சி. அவர்களை நான் மறக்க முடியாது. அவரது சீரிய குணங்களை நினைக்குந்தோறும் எத்தனை சிறந்த தமிழ்ப் பெரியாரை நாம் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி மேலிட்டெழுகின்றது. அவர்களது உள்ளம் அன்பினுல் எப்பொழுதும் குழைந்து நின்றது. கொழுந்து விட்டெரியும் அனல்போல் தேசபக்தியும் தாய்மொழிப் பற்றும் அவரது ஆன்மாவில் எப்பொழுதும் கனன்று

ஜொலித்துக் கொண்டிருந்தன. இப்பெருமகனு ரிடத்து அமைந்து கிடந்த பிள்ளையுள்ளம் தனிப் பட்ட வசீகர சக்தி வாய்ந்தது. வ. உ. சி.'யின் சரீரம் மறைந்துவிட்டது. ஆனால், அவரது பெரும் புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

★

# 17. வீரர் சிதம்பரம் பிள்ளை

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

மடமையதோ பிறநாட்டார் மயக்கந்தானோ
மக்களெல்லாம் சுதந்திரத்தை மறந்தாராகி
அடிமைஇருள் நள்ளிரவாய் அனைத்தும்மூடி
யாரும்தலை நீட்டவொண்ணு அந்தநாளில்
திடமனத்துச் சிதம்பரப்பேர் பிள்ளைவாள்தான்
செய்திருக்கும் அச்சமற்ற சேவைசொன்னுல்
உடல்சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்து உணர்ச்சி
பொங்கும்
உள்ளமெல்லாம் நெக்குநெக்காய்
உருகுமன்ருே!

எல்லாரும் தேசபக்தர் இந்தநாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க்
காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்கவொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்தநாளில்
வல்லாளன் சிதம்பரனுர் சிறையிற்பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைக்கில் வாய்விட்
டேங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர்கொட்ட
கனல்பட்டவெண்ணெயெனக் கரைவார்
இன்றும்!

சாதிகுலச் சமயமெல்லாம் கடந்ததக்கோர்
சமரசமும் சன்மார்க்கமும் தழுவும்சான்ருேர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர்சேர்ந்து
நிறுவியநம் காங்கிரசை நிதமும்போற்றி
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்தபோதும்
பெரியசபை அதைஇகழ்ந்து பேசாநேசன்

ஓதிஅதன் வளர்ச்சியையே விரும்பிவாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான்
உள்ளம்!

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம்என்று
பெரியபல தீர்மானக் கோவைசெய்து
காசுபணப் பெருமையினுல் தலைவராகி
காங்கிரசை நடத்தியதைக் கண்டுநொந்து
தேசநலம் தியாகமின்றி வருமோஎன்று
திலகர்பிரான் செய்தபெரும் கிளர்ச்சிசேர்ந்து
ஓசைபடா துழைத்தசில பெரியோர்தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனார் ஒருவராகும்.

"உழுதுபல தொழில்செய்து உழைப்போரெல்லாம்
உணவும் உடைவீடின்றி உருகிவாட
பழுதுமிக அன்னியருக்குத் தரகராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்"என்று
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம்கண்டு
அந்நாளில் சிதம்பரனார் இட்டவித்தாம்
விழுதுபல விட்டுப்பெரு மரமாய்இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக்காண்
போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக்கேட்கும்
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணைகாட்டும்
குள்ளமென்னும் ஒருஉருவம் இருகைகூப்பி
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க
நிற்கும்
வெள்ளையின்றி வேறுநிறம் அறியாஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியேவீசும்
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள்
தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவுகூர்ந்
தால்.

✱

# 18. வ. உ. சி.

கி. ஆ. பெ. விசுவநாதம்

திரு. வி. க., வ. உ. சி. இருவரும் தோழர்கள். தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள். தமிழர்களை அரசியலில் பங்குகொள்ளச் செய்தவர் நால்வர். அவர்கள் யாரென்றால் திரு.வி.க., வ. உ. சி., வரத ராசுலு நாயுடு, ஈ. வெ. ரா. இவர்களை முதலியார், பிள்ளை, நாயுடு, நாயக்கர் என அழைப்பது வழக்கம். தற்போதைய காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்குத் தமிழ்ப் பற்று இல்லை என்று கூறி வருகிறார்கள் ஒரு சிலர். ஆனால், கூற்றைப் பொய்ப்பித்தவர் வ. உ. சி. இவர் தமிழுக்குத் தொண்டு செய்தார். காங்கிரஸ் இயக்கம் இன்று வெற்றி பெற்றது, நல்ல நிலையில் உள்ளதென்றால் அது இந் நால்வரைச் சார்ந்தது. இப்பழி துடைக்கப்பட வேண்டுமாயின் வ. உ. சி. யையும் திரு. வி. க. வையும் நினைக்கவேண்டும். தமிழனுக்குத் தொண்டு செய்பவன் தமிழ் உணர்ச்சி அற்றவனாக இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவனை யாரும் மதிக்கமாட்டார்கள். அவர்களின் தொண்டு தமிழகத்தில் செல்லாக் காசாகிவிடும்.

இன்றைய தொண்டர்கள் மேற்கூறப்பட்ட நான்கு தலைவர்களைப்பற்றி அவர்கள் கொள்கைகளையும் முறைகளையும் அறிந்து எவ்வாறு தொண்டு செய்யவேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். வ. உ. சி. தென்னாட்டுத் திலகர், கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றும், ஆங்கிலத்தில் V.O.C. என்றும் குறிப்பிடப்படுகிறார். வ. உ. சி. சிறந்த தொழிலாளர் தலைவர். தற்போது வீரமற்ற தொழிலாளர் தலைவர்களைப் போன்றவர் அல்லர். தொழிலாளர்

தலைவன் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு இலக்கணமாக விளங்கினர். வ. உ. சி. யின் சொற்கள் எலும்பைத் துடிக்கவைக்கும் சக்தி வாய்ந்தவை. இவ்வாறு வ. உ. சி. யைப் பற்றி ஆங்கிலேயத் துணைத்தண்டல் நாயகமே குறிப்பிட்டுள்ளார். இதன் வாயிலாக அவர் எத்தகைய தொழிலாளர் தலைவர் என்பது நன்கு விளங்கும். வ. உ. சி. சிறந்த தமிழ்ப் புலவர். திருக்குறள், பெரிய புராணம் இவற்றில் பற்றுக் கொண்டவர். திருக்குறளுக்கு எழுதப்பட்டிருந்த மணக்குடவர் உரையை அச்சிட்டு வழங்கினர். சொற்பொழிவுகளும் செய்தார். இவர் சிறந்த பதிப்பாளர், நூலாசிரியர், தொழிலாளர் தலைவர். இவர் லோகமான்ய பாலகங்காதர திலகரின் சீடர். உலகில் எங்காவது ஒரு இயக்கம் ஏற்பட்டால் அதற்கு உடனே தமிழகத்தில் ஒரு கிளை ஏற்பட்டுவிடுகிறது. ஆனல், நம் நாட்டில் நாட்டுக்கு, மொழிக்கு மக்களுக்கென ஒரு அமைப்பு கிடையாது. தமிழன் உலகத் தோழன் என்றும் தமிழ் நூல்களே சான்று கூறுகின்றன. திரு. வி. க. கூட "உலகம் நோக்குமின்" என எழுதியுள்ளார்.

திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் சான்று கூறும். தமிழன் குறுகிய நாட்டானயினும் உலகினுக்கு நூல் அமைத்துள்ளான். தமிழன் உலகத்தான் அல்ல. ஆரியன் அல்ல. இந்தியனல்ல. திராவிடனல்ல, அவன் தமிழன். ஒரு தமிழன் தான் ஒரு தமிழன் என்று கூறிக்கொள்ள வெட்கமடைவானேயானல் நாடும், மொழியும் அவனும் வாழ வழியில்லை ; வாழ்வது கடினம். அவ்வாறு வெட்கப்படும் நிலையில் இருப்பின் வாழ்வதை விட மாள்வது நல்லது. அத்தகைய நிலைகளைக் கொண்ட நாடு இன்னும் ஒரு கடல்கோள் ஏற்பட்டு அழிந்து போதல் நலம்.

பேச்சுக் கலை, ஒரு தனிக் கலை. பிறவற்ருல் செய்ய முடியாத ஒன்றைப் பேச்சுக் கலையால் செய்து முடிக்க முடியும். அத்தகைய வலிமை பேச்சிற்கு உண்டு. வ. உ. சி.யும் நானும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் நான்கு கூட்டங்களில் பேசியுள்ளோம். இருவருக்கும் அரசியலில் கருத்து வேறுபாடு உண்டு. இருப்பினும் நெருங்கிய நண்பர்கள். தமிழ்ப் பற்று இருவரையும் இணைத்தது. வ. உ. சி. அவர்கள் என்னைக் காங்கிரசில் சேர வேண்டினுர். அதற்கு நான் கடிந்து உரைத்தேன். உடனே வீட்டிற்கு அழைத்துச் சென்று விடை கூறினுர். மூன்றரை மணி நேரம் உரையாடினேம். அவருடைய சொற்கள்தான் என்னை இந்த நிலைக்கு கொண்டுவந்தது. "யாரையும் வையாதே; வைவது தமிழன் பண்பு அல்ல. எவன் வைதாலும் வைபவன் முன்னேற முடியாது என்பதை நம்பு" என்று வ. உ. சி. கூறினுர்.

உயர்ந்த தமிழகத்தின் சிறந்த தலைவன் மிகுந்த வறுமையில் வாடி மாண்டார். தற்கால மந்திரிகள் போலல்ல. சிறை சென்ருல் புகழ். தொண்டு செய்தால் உயர் பதவி. ஆனுல், வ.உ.சி. காலத்தில் இத்தகைய நிலை இல்லை. சவுக்கடியும், கல்லுடைத்தலும் சிறையில் உண்டு. அவர் செய்தது தவறே, சரியோ நாட்டுத் தொண்டுக்காகச் சிறை சென்ருர். கொள்கையில் பின்னடையவில்லை. வீட்டிலிருந்து அவர் வறுமையும், இவர் வீட்டார் படும் துன்பங்களையும் எழுதி விவரமாகக் கடிதம் வந்தபோதுங்கூட அவர் கொள்கையினை மாற்றி மன்னிப்புக் கேட்கவில்லை. அவர் கண் கலங்கினுர். ஆனுல், மனம் தளரவில்லை. வழக்கறிஞர் வேலை பார்த்தபோது ஐந்து ரூபாய்தான் அவருக்குக் கட்டணம். அதற்கே வழக்குகள் வராமல் துன்புறுவார்.

தமிழர்களின் பண்பு என்னவென்றால் வாழும் நாளில் போற்றாது மாண்ட பின் அவனைப் புகழ்ந்து, வாழ்த்தி மணிமண்டபம் கட்டுவது. இதற்கு இலக்கானவர் வ. உ. சி. மட்டுமல்ல; திரு. வி. க., பாரதியார், மறைமலையடிகள் போன்றவர்கள். திரு. வி. க. ஒரு பத்திரிகை நடத்தினார். அது விட்டுவிட வேண்டிய அளவுக்கு ஆதரவின்றிப் போய்விட்டது. தமிழர்கள் வாழும் எவரையும் போற்ற மறந்துவிட்டார்கள். ஆனால், மேல் நாடுகளில் அப்படியில்லை. ஒருவனை ஊக்குவிப்பதன் மூலம் அவனை உயர்த்தி வாழ்விக்கிறார்கள். நல்ல அறிஞர்கள் இல்லாவிட்டால் அவர்களை வாழ்த்துவதன்மூலம் உண்டாக்கலாம். எனவே, நாடு முன்னேற அறிஞர்களை நன்கு வாழ்த்த வேண்டும்.

★

# 19. சிம்ம சொப்பனம்

தமிழறிஞர் பி. ஸ்ரீ.

மாணக்கனுக இருந்த காலத்திலே, வீரத் தமிழர் சிதம்பரம் பிள்ளேயின் ஆவேச—அரசியல் கிளர்ச்சியை நன்கறிந்திருந்தேன். அவர் நாட்டுக்கு அரசியல் விடுதலையும் பொருளாதார விடுதலையும் ஒருங்கே தேட விரும்பினர். தமிழகத்தின் முடி சூடா மன்னராகவும், தென்னிந்தியாவின் திலகரா கவும் திகழ்ந்து, தேசியத்திற்கும் பரிபூரண சுதந் தரத்திற்கும் அஸ்திவாரக்கல் நாட்டிய பெரியாரி டம் எங்களுக்கு விசேஷ பக்தி ஏற்பட்டிருந்தது.

1905-ஆம் ஆண்டில் அதாவது வங்காளப் பிரிவினை நடந்து அரசியல் கிளர்ச்சி ஓங்கியிருந்த அந்த ஆண்டிலே சிறுவனுக இருந்த நான் வக்கீல் சாது கணபதியின் அலுவலகத்தில் சிதம்பரம் பிள் ளேயை முதல் முதல் பார்த்தேன். சிங்தையின் துணிவும் செம்மையும் முகத்திலும் கண்களிலும் குதிகொண்டன. அப்போது அங்கே நடந்து கொண்டிருந்த சம்பாஷணேயின் பயனுக, தேச பக்தியைக் காட்டிலும் வேதாந்த பக்தியே இவர் உள்ளத்தைக் கவர்ந்திருப்பதாய் ஊகித்துக் கொண்டேன்.

ஆனல், இவரது வேதாந்தம் அந்த நாளில் நம்மவர் பேசிக் கொண்டிருந்த போலி வேதாந்தம் அன்று. விவேகானந்தர் சுட்டிக் காட்டிய வீர வேதாந்த நெறியிலே சமுதாயப் பணியும் நாட்டுப் பணியும் புரிவது நல்லதென்று எங்களுக்கும் இவர் புத்தி சொன்னர்.

விரைவில் இந்த 'வேதாந்தி'யின் பகீரத முயற்சிகளால் வங்க நாட்டிலே அரவிந்தரும், விபினசந்திரரும் நடத்தி வந்த தேசியக் கிளர்ச்சியும், புனாவில் திலகர் தலைமையில் நடந்த அரசியல் கிளர்ச்சியும் தமிழ்நாட்டின் தென் கோடியிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மற்ற தமிழ் ஜில்லாக்களைக் காட்டிலும் அதிகமாகப் பரவிவிட்டன. பிள்ளையின் தேசபக்தி விவேகானந்தரின் வேதாந்தத்தில் வேரூன்றி, திலகரின் அரசியல் ஞானம்என்ற நீர் பாய்ச்சப்பெற்று, ஒரு மதாவேசம்போல வளர்ந்து விட்டது. அந்தத் தேசிய வெறியினால், தூத்துக்குடியும் திருநெல்வேலியும் கடல் கொந்தளிப்பது போல் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டன. அந்தக் கொந்தளிப்பிலே சுக்கான் இழந்த கப்பல் போலத் திரிந்தது மாணுக்கரின் உள்ளம்.

தமிழ்நாட்டிலே அந்நாளில், 'சுயராஜ்யம்' என்ற சொல்லை உச்சரிக்கவும் பயம்தான். 'சுதந்தரம்' என்றாலே 'ராஜநிந்தனை' என்று கருதிய விநோதப் பிறவிகளும் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்பட்டார்கள். 'ராஜபக்தி' என்றால் ஆறாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள ஆங்கில மன்னர்மீதும், அவரது சிங்காதனத்தின்மீதும் பக்தி விசுவாசம் என்பது மட்டும் அல்ல; இந்தியாவில் அந்நிய ஆதிக்கம் சட்டப்படி மிகவும் நியாயமாகவே ஏற்பட்டு நடைபெறுகிறது என்ற நம்பிக்கையும்கூட! இந்த நம்பிக்கையோடு, 'வெள்ளையர்களெல்லாம் தெய்வப் பிறவிகள்' என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறுவதும் சேர்ந்ததுதான் முழு ராஜபக்தி!

அத்தகைய காலத்திலே—'ஓட்டை உடைசல் இல்லாத ராஜாங்க விசுவாசம்'. வெள்ளை அதிகாரிகள் என்றால் சிம்ம சொப்பனமாக இருந்த

நாளிலே—வெள்ளையருக்குச் சிம்ம சொப்பனமாகி விட்டார் வீர சிதம்பரனார்! 'வெள்ளைப் பரங்கி யைத் துரையென்ற காலமும் போச்சே' என்ற பாரதி பாட்டைப் பாடிக்கொண்டே சிதம்பரம் பிள்ளை பேசும் கூட்டங்களுக்கு நாங்கள் போவ துண்டு.

★

## 20. ஞாபகார்த்தம்

பத்திரிகாசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம்

இந்த உலகம் ஒரு விசித்திரமான உலகம். 1912–ல் விடுதலையான பிள்ளையவர்கள் 1936 நவம்பர் 18உ காலமானார். 24 வருஷங்கள் தமிழ் நாட்டில் இருந்தார். கப்பலோட்டிய தமிழரின் பெருமையை அந்த 24 வருஷங்களில் அறிந்தவர்கள் தொகை ரொம்ப சொற்பம். அவர் நம்மைவிட்டுப் பிரிந்த பின்புதான் அவருடைய புகழ் மேலோங்க ஆரம்பித்தது. அவர் உயிருடன் இருந்த 24 வருடங்களில் கிடைத்தபுகழைவிட அவர் இறந்து 22வருஷங்களில் அவருக்குக் கிடைத்த புகழ் பத்தாயிரம் மடங்கு அதிகமாய் இருக்கும். உயிரோடு இருக்கும்போது மதிப்பிட முடியாத இந்தக் குணம் தமிழருக்கு மட்டும் தனிப்பட்டதல்ல; உலக மக்களில் பெரும்பாலோருக்கும் பொதுவானது. ஆனால், நன்றி மறக்காத குணம் பெரும்பாலோருக்கு இல்லாவிட்டாலும், சிறுபான்மையோருக்கு நிச்சயமாக உண்டு. அவர்களைத்தான் மாந்தர்களில் பெரியோர்கள் என்று வாழ்த்த வேண்டும். நமது பிள்ளையவர்களை அந்தப் பெரியோர் கூட்டத்தில் சேர்க்க வேண்டும். ஏனெனில், செய்நன்றியைப் பூரணமாக அவர் உணர்ந்தார். யாராவது பெரிய நன்மை செய்தால் அதைப் பாராட்டுவதற்காகக் குழந்தை பெற்று அவர் பெயரிட வேண்டும் என்று சொல்வது தமிழ் நாட்டில் வழக்கம். அதைப் பிள்ளையவர்கள் செயலில் காட்டித் தமிழர்களின் மதிப்பை இன்னும் உயர்த்தினர்.

இம்மாதிரி அருங்குணங்களைக் கொண்ட வ. உ. சி. நம்மைவிட்டுப் பிரிந்து இன்றோடு இருபத்திரண்டு வருஷங்களாய்விட்டன. இன்னும் எத்தனை வருஷங்களானாலும், தமிழ்நாடு உள்ளளவும் வ. உ.

சி. யின் சேவையும் தியாயங்களும் தமிழரின் உள்ளத்தில் உறைந்துகொண்டே இருக்கும். ஆனல், அதோடு தமிழர் நின்றுவிடக்கூடாது. ஒரு நாட்டில் தோன்றிய பெரியார்கள் குடியிருந்த வீடுகளை வாங்கிப் பாதுகாத்து மக்களுக்கு என்றும் நினைப்பூட்டும்படி செய்வது எல்லா நாடுகளிலும் வழக்கம். நிலையான ஞாபகார்த்தங்களில் அது ஒரு முறை. அதை நமது நாட்டிலும் பிள்ளையவர்கள் விஷயத்தில் தமிழர்கள் காட்டவேண்டும்.

★

# 21. தமிழ்நாட்டின் தவப் புதல்வர்

முல்லை முத்தையா

உறங்கிக் கிடந்த தமிழர்களை உற்சாகப்படுத்தினார்; உணர்ச்சி ஊட்டினார்; தேச பக்தி கொள்ளச் செய்தார்; அந்நியர் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்கக் கற்றுக் கொடுத்தார்; கடலாதிக்கத்துக்கு வழி காண்பித்தார். தம் சொத்து, சுகத்தை இழந்து இளவயதில் சிறை சென்றார். ஆறு ஆண்டுகள் சிறையில் கிடந்து வாடினார்; வதங்கினார். பின்னர் சிறையிலிருந்து மீண்டார். வறுமை வரவேற்றது. துயரம் தோள் கொடுத்தது; எனினும் அஞ்சவில்லை; அயரவில்லை. தமிழ் இலக்கியத்திலே திளைத்தார்; அதிலே இன்பம் கண்டார்; இன்னல்களை மறந்தார். நாடு சுதந்தரம் அடைவதைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என வருந்தினார். அவரது கடைசி மூச்சு உள்ளவரை நாட்டின் நலனிலே நாட்டம் கொண்டிருந்தார். வாய்மை, ஒழுக்கம், நன்றி, தமிழ், தேசபக்தி இவையே அவரது வாழ்க்கையின் குறிக்கோள்—இந்த லட்சிய புருஷரை கப்பலோட்டிய தமிழரை—தேச பக்தர் வ. உ. சிதம்பரனாரை தமிழ் நாட்டினர் மறந்துவிட்டனர். வடநாட்டினர் மறந்துவிடுவது வழக்கமாயிருக்கலாம். ஆனால் தமிழனைத் தமிழ் நாட்டவர் மறப்பது பெரிய துரதிஷ்டம்!

"தங்க விளக்காயினும் தூண்டுகோல் அவசியம் அல்லவா ?"—தமிழ் நாட்டின் தவப் புதல்வரை மறந்து போயிருந்த தமிழர்களை—மௌனமாக இருந்த தமிழர்களைத் தட்டி எழுப்பினார் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. வீரமுழக்கம் செய்தார். தமிழ் முரசு கொட்டினார். அவர் முழக்கம் நாடெங்கும் எதிரொலித்தது. ஒரு வீரரின் பெருமையை

மற்ருெரு வீரரால் தமிழர்கள் அறிந்து கொண்டார்கள் ; தெரிந்துகொண்டார்கள் ; இப்பொழுது வாழ்த்துகிருர்கள்; போற்றுகிருர்கள். ஆயினும் அது போதுமா? போதாதென்று ம. பொ. சி. இன்னும் முழங்கிக்கொண்டே இருக்கிருர்.

வ. உ. சி. பெயரால் ஒரு கல்லூரியும், ஒரு கப்பலும் இருந்துவிட்டால் போதுமா? பிற்காலச் சந்ததியார் வீரரை அறிந்துகொள்ள வேண்டாமா? தமிழர்களுக்குள்ள கடமையை நிறைவேற்றி விட்டதாகத் திருப்தி கொண்டுவிட முடியுமா?

நல்ல நூல்களே வெளியிட அரசாங்கம் உதவி புரிகிறது. திலகர் வரலாற்றை வரைய அரசாங்கம் ஆர்வம் கொள்ளுகிறது. தலைவர் உருவப் படங்களை தபால் முத்திரையில் வெளியிடுகிருர்கள். ஆனுல், தென்னுட்டின் திலகரை, தமிழ் நாட்டின் தவப் புதல்வரை, கப்பலோட்டிய தமிழரிடத்தில் நமது ஆட்சியாளர்கள் ஆர்வமின்றி அசிரத்தையாக இருந்துவிட்டார்கள். அவர்களே வற்புறுத்திச் செய்ய வைப்பது தமிழர்கள் கடமை—உரிமை !

சிதம்பரனூர் சந்ததியைக் கௌரவிக்க வேண்டும். அவர் வசித்த இல்லத்தை நினைவு மண்டபமாக ஆக்கி அவருடைய, அவரைப் பற்றிய, அவருடன் சம்பந்தப்பட்டிருந்த யாவையும் அங்கே பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். தபால் முத்திரையில் அவர் திருவுருவம் அமையவேண்டும். அவருடன் நெருங்கிப் பழகிய அறிஞர்கள் குழு ஒன்று கூடி, விரிவான வரலாறு வெளிவரச் செய்ய வேண்டும். நகரங்களில் அவரது உருவச்சிலை அமைக்க வேண்டும். இவற்றைப் பூரணமாக நிறை

வேற்றுவிடில் தமிழர்கள் நன்றி மறந்தவர்கள் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவார்கள். வீரரைப் போற்றாத நாட்டில் மற்றொரு வீரர் தோன்றுவது எங்ஙனம்? தமிழர்களே, ஆட்சியாளர்களே சிந்தியுங்கள்!

★

## 22. நன்றியுரை

தொகுப்பாளர்

இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளவை யாவும் எதெதிலிருந்து சேகரிக்கப் பெற்றவை என்ற விவரம் இதன் கீழ் குறிக்கப் பெற்றிருக்கிறது. அதற்குரியவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வ. உ. சி. க்கு வாழ்த்து; வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று; தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி ஆகிய பாடல்கள்—மகாகவி பாரதியார் கவிதைத் தொகுதி. சிந்தனை செய் நெஞ்சே—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை; வீர வணக்கம்—சி. சுப்பிரமணியம்; வீரச் சிதம்பரனார்—டாக்டர் சேதுப்பிள்ளை; வ. உ. சி.—கி. ஆ. பெ. விசுவநாதம்; சிம்ம சொப்பனம்—பி. ஸ்ரீ. ஆகிய கட்டுரைகள் திருநெல்வேலி வ. உ. சி. பதிப்பகத்தார் வெளியிட்ட வ. உ. சி. நினைவு மலரில் வெளிவந்தவை. நோக்கம் நிறைவேறி விட்டது—ராஜாஜி, கவர்னர் ஜெனரலாக இருந்த போது 9-12-1949இல் தூத்துக்குடி துறைமுகத்தில் வ. உ. சி. திருப்பெயரை இட்டு, கப்பலை மிதக்கவிட்ட விழாவின்போது பேசியதின் சுருக்கம். பலதுறைப் புலவர் வ. உ. சி—வ.உ.சி. சுப்பிரமணியம், 'கலை'யில் எழுதியது. சிறந்த நியாயவாதி—பரலி சு. நெல்லையப்பர், 'தினமணிச் சுடர்'ரில் வெளிவந்தது. திலகரிடம் விண்ணப்பம்—தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பிலிருந்து எடுத்தது. வ. உ. சி. யின் கனவு—தலைவர் ம. பொ. சிவஞானம்; வீரர் சிதம்பரம் பிள்ளை—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை; 'கப்ப

லோட்டிய தமிழன்' என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. பெரியார்—டாக்டர் சோமசுந்தர பாரதியார்; நான் கண்ட வ. உ. சி.—பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய கட்டுரைகள் பம்பாய் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்ட வ. உ. சி. மலரிலிருந்து எடுக்கப் பெற்ற சில பகுதிகள். ஞாபகார்த்தம்—பத்திரிகாசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் வானொலிப் பேச்சின் சுருக்கம்.

எல்லோருக்கும் மனப்பூர்வமான நன்றி.

—முல்லை முத்தையா

MADRAS-1